# மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

| VOL. 3. | MADRAS: MARCH 1901. | No. 1. |
|---|---|---|
| புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901௵ மார்ச்சு௴ | இல. ௧. |


## இந்துஸ்திரீகள் பொழுதுபோக்கும் விதம்

தென்னிந்தியாவிலுள்ள இந்து ஸ்திரீகள் பொதுவாய் வீட்டுக்கு வெளியில் சஞ்சரித்து பொழுது போக்கும் வழக்கமுள்ளவர்களல்ல. வட இந்தியாவில் சில வகுப்பைச் சேர்ந்த இந்து ஸ்திரீகள் மகமதியர்களைப் பார்த்து அவர்களுடைய கோஷா வழக்கத்தை அனுசரித்து எந்தக்காரியத்துக்கானாலும் வீட்டிற்கு வெளியே போகாமல், தங்கள் வீட்டுக்குள்ளேயும் தங்கள் கணவன், அண்ணன், தம்பிகள், பெற்றோர்களிவர்களைத் தவிர மற்ற புருஷர்களுடைய பார்வையில் விழாமல் மறைந்து வசிப்பது வழக்கம். இந்த வழக்கம், பங்காளம், அலஹாபாத், பஞ்சாப் முதலான தேசங்களில் மகமதியர்களுடைய அதிகாரம் மேலிட்டிருந்தபடியால் அந்த தேசங்களிலேயே விசேஷமாயிருக்கின்றதே யன்றி குச்சராசாதியார் வசிக்கும் மேற்கிந்தியாவிலும் மகாராஷ்டிரர் வசிக்கும் மத்திய இந்தியாவிலும் திராவிடசாதியார் வசிக்கும் தென்னிந்தியாவிலும் இவ்வழக்கமில்லை. அவசியம் நேரிடும்போது ஸ்திரீகள் தங்களுக்கியல்பாயுள்ள நாணம், அடக்கம் முதலான குணங்களை மீறாமல் சம்பாஷிப்பதில் குற்றம் ஒன்றுமில்லை. வீட்டுக் காரியங்களுக்காக கடைகண்ணிகளுக்குப் போவதும், சுவாமி தரிசனத்திற்காக தேவாலயங்கட்குப் போவதும், அக்கம் பக்கத்திலிருக்கும் இஷ்டமித்திரர்களைப் பார்க்கும் பொருட்டு வெளியேபோய் வருவதும், கலியாணம் கார்த்திகை முதலான விசேஷ உற்சாக சமையங்களில் ஸ்திரீகள் தங்களுக்குரியபடி கொண்டாடுவதும் ஸ்திரீகளின் சுபாவத்திற்கு உற்றவைகளே யன்றி மாறானவைகளல்ல. ஏழை வகுப்பைச்சேர்ந்த ஸ்திரீகள் மேற்குறித்த் காரியங்களுக்காக வெளியே சஞ்சரிப்பதுமன்றி தங்கள் குடும்ப சம்ரக்ஷணார்த்தம் வேலை செய்து சம்பாதிக்கவும் வீட்டுக்கப்பால் சென்று திரிதல் அவசியமாயிருக்கின்றது. கோஷா விஷயத்தை அனுசரிக்கும் வட இந்தியா வாசிகளான இந்துக்களும், மகம்மதியர்களும் பலவிதமாய் சங்கடப்படுகின்றார்களென்றே தெரிகின்றது. தென்னிந்தியாவில்

வசிக்கும் லாலாக்களென்றவகுப்பாரும் பூர்வம் வட இந்தியாவிலிருந்து வந்தவர்களாதலால் மகமதியர் வழக்கமாகிய கோஷா வழக்கத்தை அனுஷ்டித்து கிரககிருத்திய சம்பந்தமாய் பலவித சங்கடங்களை யனுபவிக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட வழக்கம் நம் தமிழருளில்லாதது தமிழருடைய ஆசார மேன்மையையும், நல்லொழுக்கத்தையும், தைரியத்தையும் காட்டுகிறதென்றே சொல்லவேண்டும். இப்பேர்ப்பட்ட வழக்கமில்லாத தாழ்ந்த ஸ்திரீகள் அதை அனுசரிக்கும் மற்றையவகுப்பு ஸ்திரீகளைவிட நடத்தையில் தாழ்ந்தவர்களென்று சொல்வது அறியாமையாகும். மேலும் கோஷா வழக்கமானது உலகத்தில் மகமதிய மதத்தை பின்பற்றின மகமதிய ஜாதியார்களால் மட்டும் அனுசரிக்கப்பட்டு வருகின்றதே யல்லாமல், மற்ற எந்த ஜாதியாராலும் அனுஷ்டிக்கப்பட்டு வரவில்லை. ஐரோப்பியர் அமெரிக்கர், ஜப்பானியர், சீனர் முதலான ஜாதி ஸ்திரீகள் கோஷா வழக்கத்தை யனுஷ்டிக்காதவர்களாயினும், அவர்கள் ஒழுக்கத்தில் சீர் கெட்டவர்களென்று எந்த மூடன் தைரியமாய்ச் சொல்வன்? ஆகையால் ஸ்திரீகளுக்கு வீட்டுக்கு வெளியே சஞ்சரிக்கும் ஸ்வதந்திரமானது சிலவரை யறைக்கு உட்பட்டிருக்குமானல் நன்மை செய்யத்தக்கதேயன்றி தீமை செய்யத்தக்கதல்ல. ஸ்திரீகளுக்குபுருஷருக்குள்ளதுபோலவே பழக்கத்தாலும், சாவகாசத்தாலும், பெற்றோர்களுடைய மேல் பார்வையாலும் நன்மை தீமைகள் உண்டாகின்றனவே யன்றி வெளி சஞ்சாரத்தாலும், புருஷர்களிடத்தில் அவசியயானபோது சம்பாஷிப்பதாலும் உண்டாவதில்லை. ஆயினும் மனுஷ சுபாவத்தின்படி ஸ்திரீகள் கிருக கிருத்தியங்களைப் பார்க்கவேண்டியதென்றும், புருஷர்கள் சம்பாதித்தல் முதலான வெளிக்காரியங்களைப் பார்க்கவேண்டுமெனும் வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறபடியால் ஸ்திரீகள் தங்கள் காலத்தை விசேஷமாய் வீட்டுக்குள்ளேயே யிருந்து போக்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். அப்படி யிருப்பதில் சாமானிய நிலைமையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த ஸ்திரீகள் சமையல் செய்தல், குழந்தைகளைப் பரிபாலித்தல், இன்னும் மற்ற வீட்டுக்காரியங்களைப் பார்த்தல், இவ்வாறாக பொழுதுபோக்க நேரிடுகிறது. சாமானிய அந்தஸ்துக்கு கீழ்ப்பட்ட அந்தஸ்திலுள்ள குடும்பங்களிற்சேர்ந்த ஸ்திரீகள் மேற்சொன்னபடி வீட்டுக்காரியங்களைப் பார்ப்பதோடுகூட வெளியிற்போய் வேலைசெய்து சம்பாதிக்கவும் வேண்டியிருக்கிறபடியால் அவர்கள் பொழுதுபோகாமல் சோம்பேறிகளாயிருக்கும் நிலைமையுள்ளவர்களல்ல. இவ்விரண்டு வகுப்பார்க்கும் மேல்வகுப்பாரான சில குடும்பங்களில் ஸ்திரீகள் வீட்டு வேலைகள் செய்யவும் வெளியிற்போய் சம்பாதிக்கவும் ஆவசியம் நேரிட்டியிராதிருப்பதால்

அவர்களுக்கு வீட்டுக்குள்ளேயே பொழுதைப்போக்க அனுகூலங்களில்லாமல் சங்கடப்படுவதுண்டு. அப்படி சங்கடப்படும்போது அக்கம்பக்கத்து ஸ்திரீகளை வரவழைத்து அவர்களுடன் வீண்பேச்சுகள் பேசுவதும், சோழி, புளியங்கொட்டை, பல்லாங்குழி, அம்மானை, கழக்கோடி, முதலான ஆட்டங்களாடுவதும் அல்லது சும்மா படுத்து உறங்குவதும் பொழுது போக்காக கொள்ளப்படுகின்றன. ஆனல் இவ்விதமாய் பொழுது போக்குவதால் சரீரத்திற்காவது, புத்திக்காவது, ஒரு விதமான நன்மையுமுண்டாவதில்லை. தீமையுண்டாகிறதென்றே சொல்லலாம். ஆகையால் இப்படி நன்மையை யுண்டாக்காமல் சில சமயங்களில் தீமையையும் உண்டாக்கக்கூடிய விதங்களாய் பொழுது போக்குவதை ஒழித்து நன்மையும், லாபமும் உண்டாக்கக் கூடிய விதமாய் பொழுது போக்சப் பார்ப்பது மகாவசியம். இக்காலத்தில் நாகரிகம் அதிகப்பட்டு வருவதால் சிறு பிராயமுள்ள ஸ்திரீகள் தங்கள் புருஷரோடு தனிக்குடித்தனம் செய்ய நேரிட்டு, வீட்டுவேலை அதிகமாகச் செய்ய அவசியம் நேரிடுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட ஸ்திரீகள் தக்கபடி தங்களுக்கோ, தங்கள் கணவர்களுக்கோ, தங்கள் குழந்தைகளுக்கோ நன்மையுண்டாகும்படியாக யோக்கியமும் பெருந்தன்மையுமான வேலைகள் செய்து காலத்தைப்போக்கத் தெரிந்திருப்பது மிகவும் அவசியம். முதலாவது எழுத வாசிக்கக் கற்றிருந்தால் வீணுக யாதொரு நன்மையும் உண்டாகாமல் பொழுது போக்குவதைவிட நல்ல விதமாய் பொழுது போக்குதல் சாத்தியமாகும். அதனல் தங்கள் புத்தி தேர்ச்சி பெறுவதுமன்றி தங்கள் புருஷர்களோடு சம்பாஷிப்பதில் சாமர்த்தியத்தைக் காட்டுதலும், தங்கள் குழந்தைகளுக்கு பொதுவாய் அறிவை விருத்திபண்ணுவதும் சாத்தியமாகும்; மேலும் எப்போதும் எழுதுதலும் வாசித்தலும் சாத்தியப்படாதாகையால் ஒழிந்த நேரத்தில் தையல் வேலை செய்வதும் அல்லது தங்களுக்குப் பிரியமாயும் பிரயோஜனப்படும்படியான வேலையைச் செய்தல் நல்லது. சங்கீதம் கற்றிருத்தலும், சித்திரம் எழுதுதலும், பூ கோர்ப்பதும் செடிகள் பயிர் செய்வதும், வீட்டு சாமான்களைச் சுத்தம் செய்து அவைகளிருக்கவேண்டிய விடங்களில் வைத்து சேதமுண்டாகாமல் பாதுகாப்பதும் ஸ்திரீகளுக் குற்றவேலைகள். இன்னும் அவரவர்களுடைய சந்தர்ப்பங்களுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்றபடி பற்பல வேலைகளைச் செய்து பிரயோஜனப்படும்படியாக பொழுது போக்கல் சாத்தியமேயன்றி அசாத்தியமல்ல. லோகோபகாரமான காரியங்களில் ஸ்திரீகள செய்யக்கூடிய காரியங்கள் நேரிடுமானல் அவைகளிலும் பிரவேசித்தல் உத்தமம். சமீபத்

தில் சென்னைக் கவர்னர் மாளிகையில் சில ஐரோப்பிய ஸ்திரீகளும் இந்து ஸ்திரீகளும் சேர்ந்து காலஞ் சென்ற விக்டோரியா மகாராணியவர்கள் பெயர் நிலைத்திருக்கும் பொருட்டு வைத்திய சாலைகளில் (Hospital) நோயாளிகளுக்கு பணிவிடைசெய்ய தாதிகள் தயார் செய்யவேண்டுமென்று ஆலோசனை செய்தபோது சர் வேம்பாக்கம் பாஷியம் அய்யங்காருடைய பத்தினியாரும் வேறு சில கிருஸ்துவ ஸ்திரீகளும் வந்திருந்தார்கள். பம்பாய்ப்பட்டணத்தில் ஸ்திரீகள் சேர்ந்து ஒரு சபை ஸ்தாபித்து அது சம்பந்தமாய் அடிக்கடி கூட்டங்கள் கூட்டி இறந்துபோன மிஸ்டர் ரானடேயினுடைய பத்தினியாரும் மற்ற இந்து ஸ்திரீகளும் நடத்திவருகிறார்கள். இன்னும் சில விடங்களில் பெண் குழந்தைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களை கௌரவ ஸ்திதியிலுள்ள ஸ்திரீகள் போய்பார்த்து வருவதும் சகஜமாகி வருகின்றது. இப்பேர்ப்பட்ட பொது விஷயங்களிலும் அந்தஸ்தும் அவகாசமுமுள்ள ஸ்திரீகள் கவனம் செலுத்திவருதல் பெருமையும், நன்மையுமாகுமே யன்றி குற்றமாகமாட்டாது.

ஜி. சுப்பிரமணியய்யர்.

---

## விளம்பரம்.

---

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1901-ம் ௵ பிப்ரவரி ௴ 11௳.

நெ. 115.—கீழேவரும் இந்தியா கவர்ன்மெண்டாருடைய கெஜட் எக்ஸ்ட்ரார்டினெரி பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிறது:—

### ஹோம் இலாக்கா.

### பப்ளிக்.

கல்கத்தா, 1901-ம் ௵ பிப்ரவரி ௴ 5௳

நெ. 510—மாட்சிமைதங்கிய மன்னராகிய இந்து தேசத்துச் சக்கிரவர்த்தியானவர் இந்து தேசத்து ஸமஸ்தான அதிபதிகளுக்கும் பிரஜைகளுக்கும் அடியிற்கண்ட நிருபத்தைக் களிகூர்ந்து அனுப்பியிருக்கின்றனர்:—

"இந்து தேசத்து ஸமஸ்தான அதிபதிகளுக்கும் பிரஜைகளுக்கும் தெரிவிப்பது யாதெனில்,—என் அன்புக்கும் பெருந்துக்கத்துக்கும் இடமாகிய என் தாயார் (யாவரும்) துயரடையும்படி தேக வியோகமான காரணத்தினால், மிகப்புராதனமான வம்ச பரம்பரை வழியாக எனக்குக் கிடைத்த ஸிம்ஹாஸனத்தை யான் உரிமை வாயிலாகப் பெற்றேன். என் இந்திய ராஜ்ஜியங்களிலுள்ள சுதேச ஸமஸ்தானங்களை ஆண்டுவரும் அதிபதி

களுக்கும் குடிஜனங்களுக்கும் என் வாழ்த்துரை அனுப்பவும், அவர்களுடைய க்ஷேமத்தில் எனக்கு மனப்பூர்த்தியாயுள்ள சிரத்தையை அவர்களுக்கு வற்புறுத்தித் தெரிவிக்கவும் இப்போது விரும்புகிறேன். எனக்கு முன் மிகவும் பிரசித்தி பெற்றவரும், என் துயரத்துக்குக் காரணமாய் மரித்தவருமான மஹாராணியாரே - இந்து தேசத்து விவகாரங்களைப் பரிபாலிப்பதென்னும் பொறுப்பைத் தாமே நேரில் வகித்தவரும், அந்த அகண்ட தேசத்தின் துரைத்தன விஷயத்தில் முன்னிருந்ததைவிட அதிக சம்பந்தத்தைப் பெற்றிருந்ததற்கு அறிகுறியாகச் சக்கிரவர்த்தினி என்னும் பட்டத்தை வகித்தவருமாகிய இத்தேசத்து முதல் வேந்து.

"இந்தியாவைச் சேர்ந்த சகல விஷயங்களிலும் மஹாராணியாராகிய சக்கிரவர்த்தினியார் நேரில் இடைவிடாத ஆழ்ந்த சிரத்தை காட்டி வந்தார்கள் ; அத்தேசத்துக் கோடானுகோடி பிரஜைகள் அச்சக்கிரவர்த்தினியார் விஷயத்திலும் அவர்களது ஸிம்ஹாஸனாதிபத்தியத்திலும் தெரிவித்த ராஜவிசுவாசமும் அன்பும் எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கின்றன.

"சக்கிரவர்த்தினியாருடைய மேன்மைதங்கிய நீடித்த ஆளுகையின் கடைசி வருஷத்திலே தென் ஆபிரிகாவில் நடந்த யுத்தத்தில் சுதேச சமஸ்தான அதிபதிகள் தேசாபிமானத்தினற் செய்த பெருந்தன்மையான உதவியினாலும், சுதேச ராணுவத்தார் தங்களுடைய ஜன்ம தேசத்தின் எல்லைகளுக்கப்பாற் செய்த பராக்கிரமமான சேவகத்தினாலும் மேற்படி ராஜ விசுவாசமும் அன்பும் பிரசித்தமாய் விளங்கின.

"அந்தச் சக்கிரவர்த்தினியாருடைய விருப்பத்தினாலும் அனுமதியினாலுமே யான் இந்தியாவுக்கு வந்து, பிரசித்திபெற்ற புராதனமான ராஜ்ஜியத்தைச் சேர்ந்த ஸமஸ்தான அதிபதிகளையும் பிரஜைகளையும் பட்டணங்களையும் நேரிற்கண்டு தெரிந்துகொண்டேன்.

"அப்போது என் மனதில் ஆழ்ந்து பதிந்த விஷயங்களை யான் ஒரு போதும் மறவேன் ; முதல் மஹாராணியாராகிய சக்கிரவர்த்தினியாரைப் போலவே யானும் சகல வகுப்புகளைச் சேர்ந்த என் இந்திய குடிஜனங்களின் அசேஷ க்ஷேமத்திற்காகப் பாடுபடவும் அந்த ஜனங்களுடைய இடைவிடாத ராஜ விசுவாசத்திற்கும் அன்பிற்கும் அச்சக்கிரவர்த்தினியாரைப் போலவே பாத்திரனாகவும் முயல்வேன்.

(ஒப்பம்) எட்வர்ட், மன்னரும் சக்கிரவர்த்தியும்."

விண்ட்ஸர் காஸில் ;

1901-ம் ஞூ பிப்ரவரி மீ 4உ.

## சுகன்னியா.

(2-வது புத்தகம் 236-வது பக்கத் தொடர்ச்சி.)

சௌநகமுனிவர் இராஜனது வேண்டுகோளுக் கிசையவே இராஜன் அவ்விடத்திலேயே கல்யாண மண்டபமியற்றித் தன் குமாரத்தியை அவருக்கு கன்னிகாதானமாகக் கொடுத்து கலியாணத்தை செய்து வைத்தார். இராஜன் அம்முனிவரிடம் விடைபெற்றுக்கொண்டு தனது நகரத்திற்கு சேனைகளுடன் போய்ச்சேர்ந்தான்.

பின்பு சுகன்னியாவானவள் தனது பர்த்தாவுக்கு பணிவிடை செய்து கொண்டு அவருடன் மிக நேசத்துடன் வசித்துக்கொண்டிருந்தாள். இப்படி சில காலஞ்சென்ற பின்பு ஒருநாள் அந்த சுகன்னியா தனது பர்த்தாவினுடைய பூசைக்குச் சலந்திரட்டி வரச்சென்றாள். அவ்வழியில் அஸ்வனி தேவதைகளிருவரும் எதிர் வந்து ஒ, சௌந்தரியமுள்ள பெண்ணே! நீ யார்? உனது பெயரென்ன? உன் கணவன் யார்? அவன் பெயரென்ன? வென்று கேட்க, அந்தச் சுகன்னியா என் கணவனூர் சௌநகமுனிவர், என் பெயர் சுகன்னியாவென மறுமொழி பகர்ந்தாள். இதைக்கேட்ட அஸ்வனி தேவதைகள் ஆ! ஆ!! இவள் மகா பதிவிரதைபோல் தோன்றுகிறது. இவளைச் சோதிப்போமென ஆலோசித்து "ஒ பெண்கள் நாயகமே! உன்னிளமைப் பருவத்துக்குத் தகுந்த கணவனைத் தேடிக்கொள்ளாமல் மிகுந்த கிழத்தனத்தையுடையவராயும், ஐம்புலனு மொடுங்கினவராயு மிருக்கின்ற சௌநகமுனிவரைக் கணவனாகக்கொண்டதில் நீ கண்ட பலனென்ன? ஒன்றுமில்லையே? ஆதலால் எங்களிருவர்களில் யார்பேரில் உனக்கிச்சையிருக்கிறதோ அவர்களைக் கணவனாக்கிக்கொள். இதனாலே நீ பெற்ற அழகின் பயனை அடைவாய், இப்படிச் செய்வதில் தோஷமொன்றுமில்லை" யென, இக்கன்னிகை மிகக் கோபங்கொண்டு மறு உத்தரவு ஒன்றும் சொல்லாமல் மௌநமாய் தனது கணவரிடத்து வந்து வணங்கி பின்வருமாறு கோபத்துடன் சொல்லுகிறாள் :—

"பிராணநாதா! நான் தமது பூசைக்குச் சலம் திரட்டி வரச்செல்லும் பொழுது இருவர் வந்து மறித்து என்னை யாரென்றும், எனது கணவர் யாரென்றும், மிக கர்வத்துடன் கேட்கவே நான் அவர்களுக்கு எனது பெயரையும் தமது பெயரையும் சொன்னேன். சொன்னவுடன் அவர்கள் "கிழவனைப் புருஷனாக வைத்திருப்பது உன்னழகுக்குத் தகுந்ததல்ல. எங்களிருவர்களி லொருவரை விவாகம் பண்ணிக்கொள்வதினால் தோஷமில்லை" எனச் சொன்னார்கள். நான் கோபங்கொண்டு பதிலுரைக்காமல் தங்களுக்குத் தெரிவிக்க வந்தேன்" என்றாள். முனிவர் தமது ஞானதிரு

ஷ்டியினல் அவர்கள் அஸ்வனி தேவதைகளென்று அறிந்துகொண்டு "ஓ, பெண்ணே நீ பயப்படவேண்டாம். நான் சொல்வது பிரகாரம் நீ செய்!" என, அவள் "பிராணநாதா! நான் அவ்விதம் செய்ய காத்திருக்கிறேன்." என்ருள். முனிவர் "அவர்களின்னும் முன்னிருந்த விடத்திலேயே யிருக்கின்ருர்கள். நீ அவர்களிருக்குமிடத்திற்குச் சென்று உங்களிலொருவரை மணஞ்செய்து கொள்ளுகிறேன். ஒருவர் ஏற்படுங்களென்று சொல்லு; அவ்விருவருக்கும் வழக்கு உண்டாகும். அதன் பின்பு என்னிடத்திற்கு வருவார்கள். அப்பொழுது நான் செய்யவேண்டியதைச் செய்கிறேன்." என்று சொல்லி சுகன்னியாவை யனுப்பினர். அவள் மஹா பதிவிரதையாதலால் கணவன் கூறியபடி அஸ்வனி தேவதைகளிருக்குமிடத்திற்குச் சென்று அவர்களைக் கண்டு "ஐயா நான் செய்யவேண்டிய ஏற்பாடு செய்தாய்விட்டது. உங்களிருவரிலொருவரைக் கணவனுகக் கொள்ளுகிறேன். சீக்கிரம் நீங்களும் ஏற்பாடு செய்யுங்கள்" என்று சொன்னள். இதைக் கேட்ட அவ்விருவர்களும் "ஆ! ஆ!! இதென்ன ஆச்சரியம்! நாம் வேடிக்கையாகச் சொன்னது வினையாகமுடிந்ததே என்று" ஒவ்வொருவரும் மனதுக்குள் நினைத்து ஒவ்வொருவரும் நான் இவளை மணம்புரிகிறேன், நான் இவளை மணம்புரிகிறேன், என்று வழக்கிட்டார்கள். வழக்கு முடிவுக்கு வருவது அசாத்தியமென்று இருவரும் யோசித்து சௌநகமுனிவர்தான் இவ்வழக்கின் தீர்ப்பைச் சொல்லவேண்டும் என்று எண்ணி அப்பெண்ணையும் அழைத்துக்கொண்டு சௌநகமுனிவரிடத்துக்குப் போய் இவ்விருவர்களின் வழக்கை விஸ்தாரமாகச் சொன்னர்கள். தவசிரேஷ்டராகிய அச்சௌநகர், அவ்விருவரையும் பார்த்து புன்சிரிப்புடன் "எனக்கும் உங்களைப்போல அப்பெண் பாத்தியமாதலால் எனக்கும் வழக்கிருக்கிறதென்று" பதில் சொன்னர். அவர்கள் இது என்ன "குரங்கு பிடிக்க பூதமாக முடிந்தது" என்ற பழமொழிபோல இவரும் தமக்கு வழக்கிருப்பதாகச் சொல்லுகிருரே; நாமென்ன செய்வது என்று கொஞ்சநேரம் யோசித்து "ஐயா முனிவரே உமக்கும் எங்களைப்போல வழக்கிருப்பதனல் நாமெல்லோரும் மற்றொருவரிடத்திற் சென்று இவ்வழக்கைத் தீர்த்துக்கொண்டு மூவரிலொருவர் இந்த சுகன்னியாவை மணஞ்செய்து கொள்வதே உத்தமம். ஆகையால் நாம் புறப்படுவோம்" என்ருர்கள். மூவரும் சுகன்னியாவும் வெகுதூரம் சென்ருர்கள். வழியில் ஒரு சுனை தென்பட்டது. இதன் மகிமையென்னவெனில் இதில் வயது சென்றவர்களும் மற்றவர்களும் முழுகி வெளியில் வரும்பொழுது யாவரும் அச்சுவார்த்தாற்போல ஒரே மாதிரியாக திவ்விய அழகுள்ள பால குமரர்களாயிருப்பார்கள். இவர்களிவ்வித சுனையைக் கண்டு ஒருவன் "இதில் நாமூவரும் முழுகிவருவோம். நம்மில் எவரை

யேனும் அவளை தொடட்டும். அப்படி அவள் தொட்டவன்தான் அவளுக்கு கணவனாவான்'' என்று சொன்னான். இம்மூவரும் சம்மதித்து அக்கன்னியைப்பார்த்து ஓ! பெண்ணே? இச்சுனையில் நாங்கள் மூவரும் முழுகியெழுந்து வருகிறோம். உனக்கு இஷ்டமான புருஷனைத் தொடு'' வென்று சொல்லவே அவள் சம்மதித்தாள். உடனே இம்மூவரும் அச்சுனையில் முழுகி வெளி வந்தார்கள். அவர்களில் கிழத்தனத்தையுடைய சௌநகரும் அந்த அஸ்வனிதேவதைகள் எவ்வுருவத்தோடு வெளிப்பட்டார்களோ அவ்வுருவத்தைக்கொண்டு வெளிப்பட்டு நின்றார். சுகன்னியானவள் ஈஸ்வரா! நான் என் கணவனிடத்தில் விசுவாசமும் பக்தியும் பதிவிரதையாயுமிருந்தால் நான் தொடும் மனிதன் எனது அருமையான கணவனாகவிருக்கவேண்டும். ஓ பகவானே! என்னை இவ்விதம் பரீட்சிக்கலாமா? ஜகதீசா! என்னை இச்சமயத்தில் காத்தருளவேண்டும் என்று தியானித்து பின்பு தனது கணவனையும் ஸ்தோத்திரம் செய்து தெய்வமே என்று மறுபடியும் மனதில் நினைத்துக் கடவுளை வணங்கி ஒருவரைத் தொட்டாள். அப்படி மிக பயந்து பயபக்தி விசுவாசமுடைய சுகன்னியானவள் தொட்ட புருஷன் சௌநக முனிவராயிருக்கக் கண்டு மிகச் சந்தோஷித்து மறுபடியும் ஈசனைத் தியானித்தாள். அஸ்வனிதேவதைகள் சுகன்னியா மகா பதிவிரதாசிரோமணியென்று மதித்து தாங்கள் அவளைப் பரீட்சிக்க வந்ததாகச் சொன்னார்கள். பின்பு அவர்கள் சுகன்னியாவை வாழ்த்தி சௌநக முனிவரிடம் விடைபெற்றுத் தமது லோகம் போய்ச் சேர்ந்தார்கள்.

சௌநகர் அதே ரூபத்துடனிருக்கும்படி சுகன்னியா வேண்டிக்கொண்டமையால் அவரும் சம்மதித்து இருவரும் தங்களிருப்பிடத்திற்குச் சென்று கூடிக்குலாவி வாழ்ந்துகொண்டிருந்தார்கள். சிலகாலஞ் சென்ற பின்பு சுகன்னியா கர்ப்பம் தரித்து ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்புத்திரனுக்கு சநகனென்று பெயரிட்டார்கள். இவன் சகலகலைக்கியான சொரூபியாய் மகா நிலைபெற்றதவ சிலாக்கியனாகி ஒரு மகாமுனி புத்திரியை விவாகம் செய்து வாழ்ந்துகொண்டிருந்தான்.

இச்சுகன்னியா மகா பதிவிரதையென இக்கதையால் தெரிகிறது.

[இது ஸ்ரீமகாபாரதம் ஆதிபருவம் பிருகுமுனி சருக்கத்திலிருந்து எடுக்கப்பட்டது.]

[நமது பார்வைக்கு வந்த புஸ்தகம் :—பண்டித S. M. நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட வால்மீகி ராமாயணவசனம் பாலகாண்டம்.]

## மிஸ்ஸஸ் அரண்டலும் இந்துமாதர்களும்.

இந்து மாதர்கள் ஐரோப்பிய மாதர்களுடன் கலந்து பேசுவது மிகவும் நம்மவர்களில் அரிதாகவிருந்தாலும் சில வருடங்களாக நமது மாதர்கள் ஐரோப்பிய மாதர்களுடன் கலந்து உற்சாகமாய் சிற்சில வார்த்தைகளைப் பேசிவருவதைக் கேட்க மிக சந்தோஷப்படுகிறோம். சென்ற மாதத்தில் கூடலூரில் டிஸ்டிரிக்ட் முனிசீப் அவர்களின் சம்சாரமும், இன்னும் அங்குள்ள சில மாதர்களும் ஐரோப்பிய மாதர்களுடன் கலந்து பேசினார்களாம். சில தினங்களுக்கு முந்தி சென்னை அடையாறிலுள்ள மிஸ்ஸஸ் அரண்டல் அவர்கள் லேடி ஆம்ப்தில் அவர்களை வரவழைத்தபொழுது சில இந்து மாதர்களையும் வரவழைத்தாராம். மிஸ்ஸஸ் அரண்டலும் மிஸ் அரண்டலும் விருந்தினரை யெதிர்கொண்டழைத்து ஒரு பெரிய மண்டபத்தில் உட்காரவைத்து நமது கவர்னரின் மனைவியாருக்கு ராஜா சர் இராமசுவாமி முதலியார் அவர்கள், கனம் ஜட்ஜ சர், S. சுப்பிரமணிய அய்யரவர்கள் கனம் சர் V. பாஷியம் அய்யங்கார் அவர்கள், ராய் பஹதூர் M. எதிராஜுலு பிள்ளையவர்கள், கனம் P. ரங்கைய்ய நாயுடு அவர்கள், திவான் பஹதூர் P. இராமசுவாமி செட்டியாரவர்கள், முதலியவர்களுடைய குடும்பத்தைச்சேர்ந்த மாதர்களைக் காண்பிக்கவே நமது கவர்னரின் மனைவியார் மிகக் களிப்படைந்து அவர்களுடன் உல்லாசமாக பேசிக்கொண்டிருந்தனராம். பின்பு ராய் பஹதூர் எம். எதிராஜுலு பிள்ளையவர்களின் இரண்டு குமாரத்திகளும் நமது லேடி ஆம்ப்திலுக்கு ரோஜா புஷ்பச் செண்டை வெகுமதியாக அளித்தனர்கள். கனம் சர் வி. பாஷியம் அய்யங்காரவர்களுடைய புத்திரியும் மற்றொரு மாதும் வீணை வாசித்தார்கள். இங்கிலீஷ் வாத்தியங்களும் சில மாதர்களால் வாசிக்கப்பட்டன. கவர்னரின் மனைவியார் மிக சந்தோஷப்பட்டு பின் வருமாறு சொன்னார் :—"நான் இந்தியாவிற்கு வரும் முன்னமே நமது காலஞ்சென்ற மகாராணியாரைக் கண்டபோது அவர் என்னிடத்தில் இந்தியாவிலுள்ள புத்திரர்களும், புத்திரிகளும் ராஜவிசுவாசமுள்ளவர்களென்றும் என்னை இந்தியாவிலுள்ள மாதர்களுக்கும் பெண்களுக்கும் செய்யவேண்டிய நன்மையைச் செய்யும்படியாகவும் சொன்னார்."

பின்பு விருந்தினர்களை வேறு அறைக்கு இட்டுக்கொண்டு போய் (பிராமணர்களுக்கு தனிமையாய்) அவாளவாள் மதம், ஜாதி முதலியவைகளுக்கு விரோதம் வாராவண்ணம் அவர்களுக்கு பல தின்பண்டங்களளிக்கப்பட்டபின் சந்தன புஷ்பம் தாம்பூலம் முதலியவைகளும் கொடுக்கப்பட்டு சபை கலைந்தது.

## முக்கிய குறிப்பு.

பஞ்சாபிலும் மாதர்கள்ஒரு சபைகூட்டி கர்ஸன்பிராட்டியின் வேண்டுகோள் சம்பந்தமான டப்ரின் பெருமாட்டியின் தருமநிதிக்கு உதவிசெய்ய தீர்மானித்திருக்கிறார்கள்.

இங்கிலண்டுஏகாதிபத்தியத்துக்குத்தலைவராயிருக்கும் அந்தஸ்துடையவர்களுக்கு மகாராணி அல்லது மகாராஜா வென்றபட்டம் அவரவர்கள் வகுப்புக்குத் தகுந்தபடி அளிக்கப்படும். அவர்கள் காலத்துக்குப் பின்னால் செங்கோல் செலுத்த உரித்தானவர்களுக்குப் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் பட்டங் கொடுப்பது சென்ற 700 வருஷங்களாக இங்கிலாண்டில் வழங்கிவருகிறது. இனி இப்பேர்ப்பட்ட பட்டம்கொடுக்கப்பட மாட்டாதாம்.

பெங்காளத்திலுள்ள மாதர்கள் மகாராணியாரின் ஞாபகச்சின்ன விஷயமாய் ஒரு சபை கூடினார்கள். அக்காலத்தில் விதந்துகளுக்கு ஒரு காப்புச்சாலையை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். இவ்விஷயத்தை நிறைவேற்ற குச்பீஹார் தேசத்து மகாராணியார் சபைத்தலைவராகவும், அச்சபைக்கு மிஸ் கோஷல் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பங்களூரில் 200 மாதர்கள் ஒரு சபைகூட்டி இந்துப் பெண்களுக்கத்தியாவசியமான மருத்துவப்பெண்களுக்கு வேண்டிய திரவிய உதவி செய்யவேண்டுமென தீர்மானித்தார்கள். தனவந்தரான மாதர்களிலொவ்வொருவரும் 240 ரூ. தருவதாக வாக்களித்தார்கள். மற்றவர்கள் சுமார் ரூபா 2,000 வரையிலும் கையொப்பம் செய்திருக்கிறார்கள். நமது சென்னையிலுள்ள மாதர்கள்தான் இன்னுமொன்றும் செய்ய முன் வரவில்லை.

தமதருமைத் தாயார் மரிக்க அவர்களது ஞாபகம் நிலைத்து நிற்குமாறு எவ்விதமான ஞாபகச்சின்னம் ஏற்படுத்தலாமென்னும் விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்து யாதாயினும் ஒரு தீர்மானத்தைத் தமக்குத் தெரிவிக்கும்படியாக எட்வர்ட் மகாராஜா அவர்கள் தெரிவித்தார். மகாராஜா அவர்கள் நியமித்த சங்கத்தார் ஞாபகச்சின்னம் ஒரு உன்னதக்கோபுரக் கட்டிடமாக விருத்தல் சிறந்ததென்று சொன்னார்கள். மகாராஜாவும் அவர்களது யோசனையை அங்கீகரித்திருக்கிறார்களாம். இந்த ஞாபகச்சின்ன விஷயமாகப் பொருள் சேகரிக்கப்பட்டவுடன் லண்டனில் இக்கட்டிடம் கட்டப்படுமாம்.

நம்தேசத்தில் வைசூரி அல்லது அம்மை வந்தால் குழந்தைகள் வெகு கஷ்டப்படுவது யாவருக்கும் தெரிந்த விஷயமே. இதற்காகத்தான் அம்மை குத்திக்கொள்வது நலமென சில டாக்டர்களபிப்பிராயப்பட்டு குத்தியும் வருகிறார்கள். இப்பொழுது அம்மை திடீரென ஒரு குழந்தைக்கு வந்துவிட்டால் சிவப்புக் கண்ணாடிகளுள்ள லாந்தலில் விளக்கை ஏற்றி வைத்து அக்குழந்தை யிருக்குமறையில் வைத்தால் அம்மை சீக்கிரம் இறங்குமென்பதையும், மேலும் சிவப்பு வஸ்திரத்தால் அந்தக் குழந்தையை மூடிவைப்பது நலமென்பதையும் சில பேர்போன டாக்டர்கள் கண்டு பிடித்தார்கள். சிவப்புக் கண்ணாடி வெளிச்சம் உள்ளிருப்பதால் அம்மை 5 தினத்திற்குள் போய்விடுமாம்.

---

ருஷியா சக்கிரவர்த்திக்கு ஒருநாள் வரும்படி 5,000 பவுன் அதாவது 75,000 ரூ. துருக்கி சுல்தானவர்களுக்கு 3,600 பவுன் அதாவது 53,000 ரூ. ஆஸ்திரியா சக்கிரவர்த்திக்கு 2,000 பவுன் அதாவது 30,000 ரூ. ஜர்மனி சக்கிரவர்த்திக்கு 1,600 பவுன் அதாவது 23,000 ரூ. இட்டாலியா தேசத்து அரசனுக்கு 1,300 பவுன் அதாவது 19,500 ரூ. காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாருக்கு 13,000 பவுன் அதாவது 1,95,000ரூ. பிரஞ்சுதேசத்து பிரசிடெண்டுக்கு 1,000 பவுன் அதாவது 15,000 ரூ. ஐக்கியமகாணத்து பிரசிடெண்டுக்கு 25 பவுன் அதாவது 375 ரூபா.

---

உலகத்தில் மிக சுத்தியான நகரம் :—பாரிஸ், உலகத்திலுள்ள நகரங்களில் மிக சுத்தியானதாம். தினம் காலையில் 2,000 புருடர்களும், 600, ஸ்திரீகளும் தெருக்களையெல்லாம் சுத்திசெய்து வருகிறார்களாம். இவர்கள் காலையில் 4 மணிக்கு எழுந்திருந்து சாயங்காலம் 4 மணி வரையிலும் வேலை செய்கிறார்கள். மத்தியில் இரண்டுமணி நேரம் இவர்கள் சாப்பிடுவதற்காக விடப்படுவார்கள். ஆக ஒரு நாளைக்கு சுமார் 10 மணி நேரம் வேலைசெய்து வருகிறார்கள். ஸ்திரீகள் காலையில் மாத்திரந்தான் வேலை செய்து வருகிறார்கள். இவ்வித மிருக்குமிருந்தால் நமது சென்னைமா நகரமும் இரண்டாவது சுத்தியுள்ள நகரமென்று சொல்லலாமல்லவா?

---

நமது மகாராஜாவின் குமாரராகிய யார்க்கோமகன் (Duke of York) ஆஸ்திரேலியா முதலிய விடங்களுக்குச் சென்று பின்பு லங்கைக்கும் விஜயம் செய்வார். முன் 1875-ம்வருஷத்தில்நமது மகாராஜா அவர்கள்பிரின்ஸ் ஆப் வேல்ஸாயிருக்கும் பொழுது இந்தியாவிற்கு வந்திருந்தார். அக்காலத்தில் ஜனங்கள் வெகு சந்தோஷம் கொண்டாடினார்கள். நமது மகா

ராஜா அவர்களும் பிரியத்தோடு தமது பிரஜைகளைக் கண்டுகளித்தார். அவ்விதமே இவர் குமாரரும் இந்தியாவிற்கு இப்போது வந்தால் நலமென சிலரபிப்பிராயம். ஆனால் பார்லிமெண்ட் கன்ஸர்வெட்டிவ்கட்சியில் மெம்பராயுள்ள சர் எம். எம். பௌனகரி என்பவர் பார்லிமெண்டில் கோமகன் இந்தியாவிற்கும் சென்றால் நலமென சொன்னதற்கு மிஸ்டர் பால்பர் அவருக்கு சாவகாசமில்லாமையால் இப்பொழுது இந்தியாவிற்குப் போக முடியாதென மிக விசனத்துடன் தெரிவித்ததாகத் தெரிகிறது. இது நமது துர்பாக்கியமேயாம்.

---

சென்ற டிசம்பர் மாதம் சென்னைக் கவர்ன்மெண்டார் நடத்திய அப்பர் ஸெகெண்டரி பரீக்ஷைக்குச் சென்ற 150 பேர்களில் 17 பேர்கள் அந்தப் பரீக்ஷையில் தேர்ந்ததாக கஜெட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் முதன்மையாக முதலாவது வகுப்பிலும் முத்துரமணிபம்மாள் என்று சென்னையில் உபாத்திச்சிமார்கள் பழக்கும் பிரெஸிடென்ஸி பாடசாலையில் உபாத்திச்சி வேலையில் அமர்ந்திருக்கும் ஒரு ஹிந்துஸ்திரீ எனத்தெரிய மகத்தான சந்தோஷத்தைத் தருகின்றது. பி. ஏ., எம். ஏ. முதலிய பெரிய பட்டங்களை எளிதில் பெறலாம்; ஆனால் அப்பர் ஸெகெண்டெரி என்ற மகா கடினமான பரீட்சையில் தேறுவது கஷ்டமான விஷயம். இந்தப் பரீட்சைக்கு அநேக புத்திமான்கள் போய்த் தவறியதை நாமறிவோம். அன்றி இந்தப் பரீட்சைக்கு அநேகர் முயற்சிப்பதையே விட்டிருப்பதைப் பார்த்தாலும் அந்தப் பரீட்சை கஷ்டமானதென வெளியாகும். இதில் ஒரு ஹிந்து ஸ்திரீ கியாதியுடன் தேறினரென்றதை யார் கொண்டாடாதிருப்பார்?

---

ஆங்கிலேய ஸ்திரீகளுக்கும் இந்து ஸ்திரீகளுக்குமிருக்கும் வித்தியாசம் பின்வரும் கதையால் தெரியவரும்:—நமது காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்கள் குழந்தையாயிருந்தபொழுது தமது தாயாருடன் ஒரு பிரபு வீட்டிற்குச்சென்றனர். அக்காலத்தில் அப்பிரபுவின் பத்தினியார் இவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது குழந்தை கூச்சத்தால் பேசாமலிருக்குமோ என்று எண்ணி "குழந்தையைப் பார்த்து அம்மா! உனது வீட்டில் எப்படியிருப்பாயோ அவ்விதமே இங்கேயுமிருக்கலா" மெனச் சொல்லவே நமது விக்டோரியா மகாராணியார் உடனே இடுப்பிலுள்ள வஸ்திரத்திற்குமேல் வேறொரு துணியையும் கட்டிக்கொண்டு கையில் ஒரு துணியையும் எடுத்துக்கொண்டு ஜன்னல்கள் கண்ணாடிகளைத் துடைக்க ஆரம்பித்தாராம். நம்மவரில் இவ்வித வழக்கமில்லை. பணமுள்ளவர்கள் தங்கள் வேலைக்காரனைக்கொண்டு வேலையைச் சரிவர செய்யச்சொல்லலாம். மத்திய

வகுப்பார் தாங்கள் தாங்களே தங்கள் வீட்டிலுள்ள வஸ்துக்களேயும், புஸ்தகங்களேயும் துடைத்து சரியாயும் வைத்துக்கொள்ளலாம். இவைகளைத் தாங்கள் குழந்தைகளுக்கும் போதித்து வரவேண்டிய தவசியமே.

ஸர் தாமஸ் லிப்டன் என்ற தர்மோத்தமர் தாம் சிறுவயதில் எழ்மையாயிருந்தபொழுது ஏழைகள் இங்கிலாண்டில் சாப்பாட்டிற்கு படும் கஷ்டத்தைப்பார்த்து சகிக்காமல் "தாம் எப்பொழுதாவது திரளா னதிரவியம் சம்பாதிக்கும்பொழுது ஏழைகளுக்கு சொல்ப காசுக்கு ஆகாரம் அளிக்க ஏற்பாடுசெய்கிறேன்" என்று சபதம் செய்துகொண்டார். இவரும் அவ்விதமே தனவந்தனுகவே, ஒரு பெரிய கட்டிடத்தை ல்ண்டன்மா நகரத்தில் கட்டி அதில் தினம் ஒன்றுக்கு அரை பென்னி அதாவது 6 பைக்கு 10,000 ஜனங்களுக்கு அன்னம் அளித்து வருகிறுராம். இதை முதலில் ஸ்தாபிக்கும் பொழுது நமது மகாராஜாவாகிய 7-வது எட்வர்ட் அவர்கள் அரை பென்னி கொடுத்து சர் தாமஸ்லிப்டனுடன் போஜனம் செய்தாராம். இதல்லவோ தர்மசிந்தனே. நமது சென்னேயில் எவ்வளவு ஏழைகள், குருடர்கள், நொண்டிகள், வியாதிஸ்தர்கள் தெருத் தெருவாக அலேந்து திரிந்து ஆலா பரக்கிறுர்கள். இவர்களேக் காப்பாற்ற ஒரு புண்ணியவான் தோன்றி இவர்களுக்கு ஒரு கைத்தொழிற் சாலேயொன்றை யேற்படுத்தி அன்னமுமளிக்கலாம். இவர்கள் செய்யும்படியான வேலே கூடை, முறம், பாய் முதலியவைகள்தான் தற்காலத்திற் கேற்றதாகும்.

---

## ஸிம்பலேன்.

### 6-வது அத்தியாயம். (முன் தொடர்ச்சி.)

**இமோஜன்.**—ஏ, பாஸ்துமஸ்! உன்னுடைய செய்கையைப் பார்க்கிறபோது நல்ல மனிதர்களேக்கூட நம்பக்கூடாது. பிஸானியோ, இங்கே வா, நீ யோக்கியனுயிரு: உன் எஜமானன் சொன்னவற்றை உடனே செய்: நீ அவனேப்பார்த்தால் நான் விரோதம் சொல்லாமல் அவன் சொன்னவற்றிற்குச் சம்மதித்தேனென்று சாக்ஷி சொல்லவேணும்: இதோ பார், வாளேயுருவித் தருகிறேன். அதை யெடுத்து என் இருதயத்தைவெட்டு; பயப்படாதே. அதில் துக்கமே தவிர வேறென்றுமில்லே. இதுவரையில் என் பிராணனுயிருந்த உன் எஜமானன் இப்பொழுது அதிலில்லே. அவன் சொன்னவற்றைச் செய்; என்னே வெட்டு; வேறே நல்ல விஷயத்தில் நீ வீரனுயிருக்கலாம்; ஆனுல் நீ இதில் அதைரியவானுய் விட்டாயே!

# மாதர் மனோரஞ்சனி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஒளவையார்.

| VOL. 3. | MADRAS: APRIL 1901. | No. 2. |
|---|---|---|
| புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901௵ ஏப்பிரல்௴ | இல. ௧. |


## பெற்றோர்பெருமை.

### அன்னையும்பிதாவும் முன்னறிதெய்வம்.

குழந்தைகளே! இந்தச் சிறுவாக்கியத்தை நெடுநாட்களுக்கு முன்னமே அறிவோம். நெடுங்கணக்குப் படித்தபின், தனிமொழிகளையும், தொடர்மொழிகளையும், அதன் பின்பு சிறுவாசகப்பாடங்களையும் படித்து, ஒளவையார் அருளிச்செய்த "நீதிநூற்றிரட்டுப் படிக்கத்தொடங்கி முதலில் "ஆத்திசூடி" என்ற சிறு நூலைப்படித்தோம். மேல் "கொன்றைவேந்தன்" என்கிற நூலைப்படித்தோம். அந்த நூலில் முதலாவது வாக்கியமே இதுவாம். அப்பொழுது நாம் அந்த வாக்கியத்தின் அர்த்தத்தை நன்றாய் ஆராய்ந்து படிக்கவில்லை. புத்தகத்தில் எழுதியிருந்த சிறிய "பதவுரையைப்" படித்து ஒப்புவித்துவிட்டு, இவ்வளவுதான் பொருளும் பயனுமென்று எண்ணியிருந்தோம். இப்பொழுது நாம் பெருநூல்களில் பழகி நமது புத்தி சற்று விசாலப்பட்டிருப்பதினால் அந்த வாக்கியத்தின் பொருளை நன்றாய் ஆராய்ந்து பார்ப்போம். அந்த வாக்கியத்துக்கு அர்த்தமென்ன? "தாயும் தந்தையும் ஆகிய (இருவரும்) முதலில் அறியத்தக்க (அல்லது அறியப்படுகிற தெய்வமாகின்றார்கள்" என்பதே. நம்மைப்போன்ற மனிதசரீரம் உடைய அவ்விருவரும் நமக்குத் தெய்வமாவதெப்படி? அவர்களையும் நம்மையும் படைத்துப் பரிபாலித்துவரும் ஏகநாயகனாகிய சர்வேசுவரன் ஒருவனிருக்கையில் இவர்களைத்தெய்வமென்று வழிபடுவது பாபமாகாதோ? என்றால் ஆகாது. நமது அன்னையாராகிய ஒளவையார் சிறுவருக்கென்றே அந்தநூலைச் செய்ததில்லை. மற்று சிறியார் பெரியார்யாவருக்கும் உபயோகமாகும்படி தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்கிற நால்வகைப்பொருள்களையும் அந்தச் சிறியநூலில் அடக்கி உல[illegible]தாருக்கு உபகரித்திருக்கின்றார்கள். அந்நூலில் சிலவாக்கியங்கள் [illegible]கு உரிய[illegible]. சில ம[illegible]. சில இம்மை மறுமையிரண்

டுக்கும் உரியன்வாய் மோட்சந்தருவனவுமாயுள்ளன. நாம் கீழே குறிப்பிட்டவாக்கியம் இந்த மூன்றுவது வகுப்பிற்சேர்ந்தது. ஆதலால் அதை நாம் அவசியம் விசாரித்து அறிய வேண்டியது. அதை யோசிப்போம்.

தெய்வவிசுவாசமில்லாத நாஸ்திகர்களுக்குஇந்த வசனத்தினால் பெரும்பயனில்லை. தெய்வநம்பிக்கையுடைய ஆஸ்திகர்களாகிய நமக்கே முழுவதும் பிரயோசனப்படுவதாகும். ஆஸ்திகர்களுக்குள்ளும் வேறுபட்டபல கொள்கையருண்டு. அவர்கள் நம்மைப்போலப் பெற்றோரைத் தெய்வமாகமதியாவிட்டாலும் நாம் வணங்கத்தக்கவர்கள் எல்லாரையும் விட மேலானவர்களாக மதித்து வணங்கும்படியான கொள்கையுடையவர்கள். ஆரியர்களாகிய நாமோ அவர்களை நமக்கு உலக இன்பத்தை உண்பிக்கும் மாதாபிதாக்களாகவும், பரபோகமோட்சானந்தங்களை அளிக்கும் தெய்வமாகவும் கருதி வழிபடுகிறோம். ஆனால் இப்பொழுது, கால வித்தியாசத்தாலும், பலவிதமான அநாரியர் சகவாசத்தாலும் நமது முன்னோர் கொள்கைக்கு மாறுபட்டு மாதாபிதாக்களைச் சத்துருவாகப் பாவிக்கிறோம். இது கலியுக மகிமை என்பர் மூதறிவாளர். தாய்தந்தையரைத் தெய்வமாகக் கருதுவானேன்? என்றால் அது ஒரு நல்ல கேள்விதான். அது விசாரிக்கக்கூடியதே. ஆஸ்திகராயுள்ளவர்கள் எல்லாரும் தெய்வத்தின் சுபாவத்தையும், அதை அறிந்து அடையும் மார்க்கத்தையும் மற்றவர்களுக்கு விளக்கிக்காட்டுவதற்கு ஒரு "குரு" அவசியம் வேண்டுமென்றே கூறுகின்றார்கள். இதை எந்த மதஸ்தரும் மறுக்கமாட்டார்கள். அந்தக் "குருவும்" சகல சாஸ்திரங்களையுங் கற்றறிந்து, தெய்வ இலட்சணத்தை உள்ளபடி தெரிந்துகொண்டு, தேவனால் அருளிச்செய்யப்பட்டிருக்கிற வேதங்கூறிய நெறியில் நிற்பவராயிருக்கவேண்டும். அப்படி இல்லாதவர்கள் குருவாகார் என்பார்கள். அது வாஸ்தவமே. ஆனாலும் நமது வேதங்கூறிய நெறி நின்ற ஆரியப்பெரியோர்கள் கண்டறிந்த சித்தாந்தமாவது—"தெய்வமென்பது நுட்பமானவைகளுக்கெல்லாம் நுட்பமானது. அணுவுக்கும் அணுவாயிருப்பது. கண் மனம் முதலிய அறிகருவிகளுக்கும் எட்டாதிருப்பது. என்றால் கண் முதலிய இந்திரியங்களாலும் மனதாலும் அறியப்படாத அதிசூட்சுமப்பொருள். அது தனக்கென்று ஒரு சொரூபம் இல்லாதது. ஆனாலும் பக்தானுக்கிரகார்த்தமாக அநந்த சொரூபங்களை யெடுத்துக்கொள்ளும் பேராற்றலுடையது. ஏனென்றால், சொரூபமில்லாததும், ஒன்றாலும் அறியப்படாததுமானால் ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத சூனியப்பொருளாகும். ஆகையால் தன் இச்சையால் பக்தர் இச்சித்தபடி சொரூப[illegible] துக்கொண்டுவந்து அநுக்கிரகம் [illegible] மையுடைய[illegible] ஒன்[illegible]

மையான இலட்சணத்தையுடையதென்று வாக்கினுல் சொல்லக்கூடாதது. என்றுல், உலகத்தில் அதற்குச் சமானமான அல்லது மேலான பொருள் ஒன்றுமில்லையாகையால் என்பது. சுவானுபூதியில் அறியத்தக்கது. என்றுல், உலகம் கடந்த பக்தர்களுடைய பெரிய ஞான அறிவிலே தோன்றத் தக்கது. அப்படியானுல் அதை யறிகிறதுதான் எப்படி? அதற்குச் சொரூபந்தான் என்ன? என்றுல் முதலாவது கேள்விக்குமேலே சொல்லப் போகிற "தெய்வமகிமை"யில் விரிவாய்க்கூறப்படும். இரண்டாம் கேள்வியைக் கவனிப்போம்.

வேதங்களிலே தெய்வத்துக்குப் பல சொரூபங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச் சொரூபங்களே சிலாவிக்கிரகங்களாகவும், சொர்ணம் முதலிய விக்கிரகங்களாகவும் செய்யப்பட்டு நமது தேவாலயங்கள்தோறும் விளங்கிக்கொண்டிருப்பன. அதன் விவரம் மேலே பேசப்படும்; பின்னும் குரு லிங்கசங்கமம் என்கிற மூவகைச் சொரூபங்கள் கூறப்பட்டன அவற்றுள் "லிங்கம்" என்பது மேற்குறித்த விக்கிரக சொரூபந்தான். "குரு" என்பது வேதங்கூறிய மார்க்கத்தில் நடந்து, தெய்வலட்சணத்தை உள்ளபடி தெரிந்துகொண்டு, முறைதவருமல்ஆராதித்துத் தெய்வத்தன்மையை யடைந்து பிறருக்கு உபதேசிக்கிற பெரியோர்களது திருவுருவமேயாம். "சங்கம" வடிவமாவது—தெய்வத்தினிடத்தில் இடையருத பக்தி செலுத்திவருகிற மெய்யடியார்களுடைய திருவுருவமாகும். சங்கம வடிவத்தினிடத்தில் பக்தி செலுத்துவது எல்லாருக்கும் எளியதன்று. குருவுருவமே யதற்குரியது. ஏனென்றுல் தனக்கொரு பொருளை உபதேசிப்பவனிடத்தில் பூபக்தி விசுவாசம் வைப்பது எல்லாமனிதருக்கும் சகஜம். ஒரு மனிதன் எவனுவதொருவனிடத்தில் ஒரு பொருளைக் கேட்டுத் தெரிந்துகொண்டால், கற்றுக்கொடுத்தவனை அலட்சியம் செய்வது எந்த மதஸ்தருக்கும் இயல்பல்ல. அப்படி யலட்சியஞ்செய்யப்பட்டவனை மிருகத்தன்மை யுடையவனென்று யாவரும் வெறுப்பார்கள். "எழுத்தறிவித்தவனிறைவனுகும்" என்ற மூதுரையும் இந்தக் கருத்தையே விளக்க எழுந்தது. நமது ஆரியோத்தமர்கள் ஒரு எழுத்தை உபதேசித்தவனைக்கூடத் தெய்வமென்று நினைக்கும் பெருந்தன்மையுடையவர்கள். ஏனென்றுல் இதில் ஒரு இரகசியமுண்டு. அதாவது "அறிவு" என்பதே கடவுளுக்கு இயல்பான சொரூபமென்று நமது வேதம் சொல்லுகின்றது; அவ்வறிவை யுடைய ஜீவாத்மாவையும் தெய்வம் என்றே நினைக்கவேண்டுமென்பது ஆரியர்சித்தாந்தம். நமக்கு ஒன்றை அறிவித்தவன், அதை யறியாதிருந்த நம்மைவிட மேலானவனுகுமல்லவா? அறிவே தெய்வத்துக்குரிய சொரூ

பமானல் அவனிடந் தெய்வத்தன்மை அதிகமாக விளங்குகிறதென்று கருதவேண்டும். ஓர் எழுத்தை யுபதேசித்தவனையே இப்படி நினைக்க வேண்டியதானல் சகலகலைகளையும் உபதேசித்த குருவை யெப்படி நினைக்கவேண்டியது? அவனே மேலான தெய்வமென்று நாம் வணங்கவேண்டியது உசிதமல்லவா? இப்பொழுது சொல்லப்பட்ட குருமார்கள் எல்லாரும் அநித்தியமான பொருளை உபதேசித்தவர்கள். அநித்தியமான பொருள்களின் இலக்கணங்களை முழுதும் அறிந்து உபதேசிப்பதற்கே அவனிடம் தெய்வவிளக்கம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவன் ஒன்றையும் உணரமாட்டான். இதனது விபரங்களெல்லாம் இச்சிறு நூலில் அடங்காதாகையால் வேறு நூலில் எழுதுவோம். உலகப்பொருளை யறிவதற்கே தெய்வத்தன்மை வேண்டுமானல் உலகத்துக் கெட்டாமலிருக்கிற பரம் பொருளை யறிந்து உபதேசிக்கும் அந்த குரு தெய்வமாகவே யிருக்கவேண்டும் என்பது நிச்சயம். தெய்வ வுண்மையை அறிவதற்குத் தெய்வத்தன்மையேவேண்டும். இல்லாவிட்டால் அதை ஒருபொழுது மறியக்கூடாது அதை யறிந்தவனையே நமது பெரியோர்கள் 'ஞானி' என்பார்கள். ஞானி என்ருல் பேரறிவுடையவனென்று அர்த்தம். மற்றையவர் எல்லாரும் ஞானியல்ல. அறிஞர் என்னப்படுவார்கள். பேரறிவுடைய ஞானியாகிய குருவையே தெய்வமாகவழிபட வேண்டுமென்பது வேதசம்மதம். அவனே முக்கியமான குரு. மற்ற குருமார்கள் அவ்வளவு சிறந்தவர்கள் ஆகார்கள். இவ்வளவு தூரம் சொல்லிவந்ததனல் தாய் தந்தையர் தெய்வமாவார்களென்பது விளக்கப்படவில்லையே யென்ருல் அப்படியல்ல; அதை விளக்குவதற்காகவே யிவ்வளவு தூரம் சொல்லிவந்தோம். எப்படியென்ருல் சொல்லுவோம்.

நமது ஆரியர்கள் கொண்ட விவாக சம்பந்தமென்பது புறத்தேசத்தாரும், புறமதஸ்தரும் கொண்டது போல உலக இன்பத்தை அனுபவிப்பதற்காக அல்ல. சற்சந்தான விருத்தியைக் குறித்தே. சற்சந்தானமாவது ஞானியாகியபுத்திரனகும். இந்த விவாக விஷயம் முற்றும் கற்புடைமையைப்பற்றிப் பேசுமிடத்தில் விவரித்தெழுதப்படும். நிற்க ஞானியாகிய; புத்திரர் புத்திரிகளைப் பெற்று அவர்களால் உலகத்தில் ஆஸ்திகமத உண்மையை நிலைநிறுத்தி யாவரையும் மோட்சாநந்தத்தில் முழுகச் செய்ய வேண்டுமென்பதே யாரியர்கள் கொள்கை. வெகுகாலந்தவமிருந்து அப்படிப்பட்ட புத்திரோற்பத்திக்குரிய காலதேசகுண தோஷங்களைச் சோதிட முதலிய சாஸ்திரங்களால் நிச்சயித்தறிந்து கர்பபாதான முதலியவைதிக சற்கருமங்களைச் செய்து அறிவிற்சிறந்த குழந்தைகளைப் பெறுவது வழக்கம். இங்கு யோசிக்கத்தக்கது இது! அறிவே சொரூபமாக இருக்கப்

பட்ட ஆத்துமாவானது நிர்மல சரீரியாயிருக்கிற தகப்பனிடத்தில் ஜீவ சக்தியைப் பெறுகிறது. பின் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்துச் சரீரத்தைப் பெறுகிறது. சரீரமாவது அந்தக் கரணங்கள், ஞானேந்திரியங்கள், மனம் முதலிய அறிகருவிகள், கருமேந்திரியங்களாகிய தொழிற்கருவிகளுமான அவயவப் * பகுப்புகளோடுங் கூடிய ஒரு பிண்டம். அறிகருவிகள் உலகப்பொருள், உலசங்கடந்த பரம் பொருளாகிய இரண்டையும் அறிவதற்குரியன. அவற்றையடைவதற்குரிய சாதனமாக நிற்பன தொழிற்கருவிகள், இச்சரீரமில்லாவிட்டால் ஜீவாத்மா ஒருபொருளேயுமறியாது. மனமாதி அறிசருவிகளில்லாமல் ஜீவாத்மா ஒன்றையும் அறியாதென்பதை ஒருவரும் மறுக்கத்துணியமாட்டார்கள். அப்பேர்ப்பட்ட அறிகருவிகள் எங்கிருந்து கிடைத்தன? அருமையான மாதாவின் சரீரத்திலிருந்துதான்? சாதனப்பொருளாகிய கரசரணுதி அவயவங்கள் எங்கேயிருந்து வந்தன, மாதாவின்சரீரத்திலிருந்துதான். அறிவுஸ்தானமென்று சிலரால் சொல்லப்படும் மூளையென்னும் சிறந்த அறிகருவி எங்கேயிருந்து வந்தது? நமது தாயின் திருமேனியிலிருந்துதான். குழந்தைகளே! நீங்கள் உங்களுடையதென்று நினைத்து இறுமாந்திருக்கிற சரீரத்தில் உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரைக்குமுள்ள அவயவங்கள் ஒவ்வொன்றையும் இப்படியே விசாரித்துப்பாருங்கள். அப்பொழுது உங்களுக்குச் சொந்தமான சரீரமொன்று இல்லாமற்போம். அவைகளெல்லாம் தாய்க்கே சொந்தமும் உங்களுக்கு இரவலுமாம். ஆகையால் தாயே நமக்குத் தன் சரீரத்தைக்கொடுத்து இகபர ஆநந்தபோகங்களைக் கொடுத்தருளும் பரம குருவாகவிருக்கின்றுள் என்பது நிச்சயமாகத் தெரியவரும். இன்னம் சற்றுயோசிப்போம். இவ்விதமான சரீரத்தைக் கொடுத்தருளியுபகாரம் செய்ததும் ஒரு பெரிதல்லவென்றுலும், பாருங்கள் நாம் கர்ப்பாசயத்திலிருந்தபொழுது நமது அருமைத்தாய் நம்மாலே பட்டபாட்டை நாம் அறியாவிட்டாலும் உலகத்தில் மற்றதாய்மார்கள் படுகிற கஷ்டத்தையறியக்கூடுமல்லவா? நிற்கவும், உட்காரவும், படுக்கவும் கூடாமல் கஷ்டப்பட்டதெத்தனை? அன்னந்தண்ணீர் ஆகாராதி நித்திரையில்லாமல்பட்ட பாடு எத்தனை? இடையில் நேர்ந்த வியாதிகளெத்தனை? மரணுபாயகரமான விபத்துக்களெத்தனை? இவ்வளவு பெரிய கஷ்டங்களை நம்மால் அனுபவித்தும் நமது தாய் நம்மேலே அணுவளவாவது துவேஷம் வைத்ததுண்டோ? நம்மைப் பெற்றவுடனே நமதன்னைக்குண்டான ஆநந்தம் அளவிலடங்குமோ? அது நிற்கட்டும்; நம்மைப் பெற்றபின் நமக்குச் சரீரத்தைக் கொடுத்ததே போதுமானது என்று நினைத்துத் தூரத்தில் போட்டுவிட்டாளோ? இல்லை; இல்லை; நமது சரீரம் பலப்படும்படியாகத் தனது சரீ

* பகுப்பு=பிரிவு.

ரத்திலுள்ள் சத்தாகிய பாலைக்கொடுத்து எத்தனைகாலம் போஷித்தாள்? நாம் வியாதிப்பட்டகாலத்தில் தனது சுகத்தைச்சிறிதும் நினையாமல் அன்னபானாதிகளையும் வெறுத்து நமக்காக எவ்வளவு பாடுபட்டாள்? கண்ணை யிமை காப்பதுபோல நமக்கொருதுன்பமும் உண்டாகாதபடி பாதுகாக்கும் நிமித்தம் பட்டபாடு சொல்லமுடியுமோ? இப்படி நம்மைக்காக்கும் நிமித்தம் கஷ்டப்பட்டதனாலே அவள் தெய்வமாவதெப்படியெனில்; நமது கருவி கரணாதி சரீரத்தைக்காத்து ஏன் இரட்சித்தாள்? நம்மிடத்தில் உண்டான கருணையினாலேதான். இங்கே யிரகசியம் இது "கருணாகரன்" என்று தேவனுக்கொரு பெயர். அதாவது கருணையையே சொரூபமாக வுடையவன் என்பது. கடவுளின் சொரூபமாகிய அறிவையுடைய குருவைக் கடவுளாகக் கருதியதுபோலக் கருணையையுடைய தாயையுந் தெய்வமாகக்கருதுவது இங்கே சிறந்தது. அதனால் தெய்வத்தின் கருணையை 'சக்தி' என்றும், அதைப் பெண்பாலாகச் சொல்வதும் நமது முன்னோர்கள் அபிப்பிராயமாவதன்றியும், வேதநிச்சயமுமாகும். அந்தக்கருணையையே ஸ்ரீ பார்வதிதேவியார் என்றும், ஸ்ரீ இலட்சுமிதேவியாரென்றும், ஸ்ரீ சரஸ்வதியம்மையார் என்றும் பெரு நூல்கள் கூறுகின்றன. பெண் சொரூபமாகவருணிக்கப்பட்ட கருணையாகிய தெய்வசக்தியானது பெண்களிடத்தில் விசேஷித்திருக்கும் என்பதும், அது தமது குழந்தைகளினிடத்தில் களங்கமற்றுப் பிரகாசிக்கும் என்பதும், அந்தக் களங்கமற்றக் கருணையே தனக்கும் சொரூபமாக இருந்து குழந்தைகளைப்பெற்று வளர்க்கும் தாய் தெய்வமேயாவாள் என்பதும், சிறந்த இரகசியம். இதுமட்டும் அல்ல; நமக்கு முதலில் அறிவு புகட்டிய குருவாவதும் தாயேயாம். எவ்வாறென்னில் நாம் குழந்தையாயிருந்த காலத்தில் அன்னபானாதிகளை யருந்தக்கற்பித்ததும் அன்னையே? நாம் பேசும்படி கற்பித்துக்கொடுத்ததும் அன்னையே. தந்தைமுதலியோரை நமக்குத் தெரிவித்ததும் அன்னையே. நன்மை தீமைகளைப்பகுத்து அறிவித்து, நன்மைகளைச்செய்து தீமைகளை ஒழிக்கும்படி கற்பித்ததும் அன்னையே. நாம் கல்விபயில்வதன் முன் அறிந்த அறிவெல்லாந் தாயினாலேயே யன்றி வேறல்ல. அறிகருவிகளைத்தந்து அவற்றை விருத்தியாக்கி யறிவைப்புகட்டியதும் கருணை மிகுந்ததாயே யாகும்.

இனி ஜீவாத்மாக்களுக்கு அறிவைக் கொடுப்பதும், இகபரசுகத்தைக் கொடுப்பதும், தெய்வஉண்மையை விளக்குவதும் தெய்வத்தின் செய்கையே யன்றி மற்றவராலில்லையென்பது வேதத்தின்கருத்து. அதுவே ஆரியது துணிபுமாகும். அதை விளக்குவதற்கே "அவனன்றி ஓரணுவுமசை

யாது'' என்னும் முன்னோர் திருவாக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத் தெய்வத்துக்குச் சுபாவத்தில் ஒரு சரீரமில்லாமையால் மனிதரைக்காத்திரட்சிக்க மனிதர்போலவே யெழுந்தருளுமென்று நூல்களெல்லாங் கூறுகின்றன. ஆகையால் நாம் சிறிதும் அறிவில்லாமல் கிடந்த குழந்தைப்பருவத்தில் சருவவல்லமையுள்ள தெய்வமே மாதாபிதாக்கள் சொரூபமாகி நம்மைக்காப்பாற்றி யறிவுபுகட்டியதென்பதும் நியாயமே. குழந்தைப்பருவத்தில் தெய்வமுண்டென்றும், பாபபுண்ணிய முண்டென்றும், பாபத்தின்பலன் கஷ்டமாகுமென்றும், புண்ணியத்தின்பலன் ஆனந்தமாகுமென்றும், அவற்றைக்கொடுப்பது தெய்வமேயாமென்றும், அந்தத்தெய்வத்தைக் களங்கமற்ற சிந்தையோடு தியானித்தல் வேண்டும் என்றும், அப்படிச்செய்தால் நமக்குத் தெய்வகிருபையுண்டாகு மென்றும் போதித்ததும் நமதுதாயேயாகும். இப்படியாக நமக்குப் பேருபகாரஞ்செய்து அறிவுபுகட்டி யிம்மை மறுமை வாழ்வுகளைக் கொடுத்தருளக் கங்கணம்கட்டிக்கொண்டு முன்னின்ற பரமகுருவாவது நம்மிடத்தில் கருணைசொரூபியாக விளங்கிக் கொண்டிருந்ததாயேயாகும். நம்மை யீன்று காத்து இரட்சித்து அநுக்கிரகம் புரிந்தருளியதாயைத் தெய்வமேயாமென்று வணங்குவது ஆரியர்களாகிய நமக்கு ஒருபோதும் குறைவாகாது. அதுவே நமக்குப் பரம புண்ணியமும் நன்றியறிதலுமாம். தாயால் நமக்கு அநுக்கிரகிக்கப்பட்ட அறிகருவிகளைக் கல்வியாகிற துணைக்கருவியால் விளக்கி, அன்னையருளிய அறிவை விருத்தியாக்கினது தந்தையாகும். தந்தையிடத்திருந்து பெற்றுக்கொண்டது ஜீவசக்தியும், தாயினிடத்தில் பெற்றுக்கொண்டது சரீரமுமாகையால் தந்தையும் தாயுமே ஆத்மாவுக்குச் சகலாதாரமாய் நிற்பவர்கள். அவர்களைவிடக் குழந்தைகளுக்கு வேறு தெய்வங்கிடையாது. குழந்தைகட்குத் தந்தையை யறிவிப்பதும் தாயே. தந்தையைக் குருவாகக்கொண்டு மந்திரோப தேசாதிகள்பெற்று நல்வழிபட்டுய்யும்படி உபதேசிப்பதும் தாயே யாகையால் முதற்குருதாயேயாம். தாய்அறிவித்த பிறகு தந்தையையறிந்து வழிபட்டு நன்மைபெற வேண்டுமாகையால் தந்தை யிரண்டாவது குருவாகும். இதனாலேயே தாய்தந்தையரை “இருமுது குரவர்'' என்று நீதிநூல்கள் அவர்களைப்புகழ்ந்து கூறியதுமாம். அவ்விருவரையும் அலட்சியஞ் செய்தால் நரகதுன்பமடைவது நிச்சயமென்று நூல்கள் கூறுகின்றன. தெய்வமே குருவாகும் என்கிற நியாயத்தால் இருமுதுகுரவராகிய தாய்தந்தையருந் தெய்வமே யாவார்கள் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. தாயுந்தந்தையும் அறிவித்த பின்னரே தெய்வவுண்மையை நாம்தெரிந்து கொள்வதால் மாதா பிதாக்களை “முன்னறிதெய்வம்''

என்று நமதன்னையாராகிய ஔவையார் அவர்களுடைய பெருமையைப் புகழ்ந்து கூறினர். தாயானவள் தனக்குத் தெய்வமாய் விளங்குகிற நாயகனை மந்திர தந்திரோப தேசமில்லாமல் சொல்மாத்திரையால் தன் குழந்தைக்கு உபதேசித்து உண்மை வெளிப்படுத்துவதால் "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை" என்றும்; தந்தை, மந்திரதந்திர முதலியவற்றால் தெய்வவுண்மையை விளக்குவதால் "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" என்றும் ஔவையார் உபதேசித்தருளினர். இதனால் தாய்தந்தையருடைய சொல்லை மீறி நடவாமையே குழந்தைகளுக்குப் பெருந்தவமாகுமென்றும், அதுவும் பிரதானமான தெய்வவழிபாடாகும் என்றும் தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியருளினர். இவ்வாறாகத் தந்தை தாயைத் தெய்வமாக வழிபட்டு மோட்சானந்தம்பெற்றவர்கள் அளவில்லாதவர்கள் உண்டென்று பாரதாதி பெரிய நூல்கள் நிச்சயித்துரைக்கின்றன. ஆகையால் குழைந்தைகளே! நமது தாய்தந்தையருடைய திருவாக்குக்கு எதிர்வார்த்தைக் கூறாமலும், அவர்களுடைய மனங்கோணாமலும் நடக்க முயலவேண்டும். அப்படி நடப்போமானால் நமக்குத் தெய்வகடாட்சம் தானே கிடைக்கும் என்பது சத்தியம். சுபம்!

அ. சுப்பிரமணியஐயர்.

---

## மாயாபுரி விநோதக் கதை.

2-வது புத்தகம், 233-வது பக்கத்தொடர்ச்சி.

---

பிறகு ஜகதீசன் தன் குருவையும், வழிபடு தெய்வத்தையும் மனதில் தியானித்துக்கொண்டு ஒரு யோசனைச்சதுரமான கோட்டைகளை யெழுப்பி, நாற்புறமும் மஹாமேருவோ வென்று சந்தேகிக்கும்படியாகப் பொற்கோபுரங்களை யெழுப்பி அதனுள்ளே பற்பல தெருக்கள், சாலைகள், சோலைகள், செய்குன்றங்கள், ஆறு, குளம், கிணறு, ஓடை முதலியவைகளையும் நிருமித்து, நடுமையமான இடத்தில் பதினொரு நிலைகள் அமைந்த உன்னதமான அரண்மனை ஒன்றைச் சொர்க்க மத்திய பாதாளமென்கிற மூவுலகங்களிலும் இல்லாத அற்புத விநோதமாக இயற்றி முடித்தான். வெளிப்புறத்திலிருந்து பார்ப்பவர் கண்ணுக்குக் கோட்டை முதலியன தோன்றாமலும், உள்ளிருந்து பார்ப்பவருக்கு வெளியிலிருப்பவை யாவும் தெரியும்படியாகவும் பற்பல மாயாவிநோதங்கள் அமைய உண்டாக்கப்பட்டபடியால் அதற்கு **மாயாபுரி** என்று பெயரிட்டு மகிழ்ந்து, தன் தோழனைப்பார்த்து நீ போய் உன் மனைவியை அழைத்துக்கொண்டு வாவென்று சொல்லக், **கங்காதரன்** இவற்றை யெல்லாங்கண்டு பயந்து இவன் சித்தனோ, தேவனோ? வென்று ஐயுற்று மறுபேச்சுப் பேசாமல் செலவு பெற்றுக்

கொண்டுபோய் ஒரு வாரத்தில் தன் மனைவியை இட்டுக்கொண்டு மாயாபுரி வந்து சேர்ந்து, தனக்கென்று நிருமிக்கப்பட்ட விடுதியிலிறங்கி, ஜகதீசனிடத்தில் வந்து வணங்கிச் சுவாமி! இனிமேல் செய்யவேண்டுவதென்ன என்று கேட்டான். அவன் அப்பா கங்காதரா! சீக்கிரத்தில் நமது நகரத்தைக் குடிகளால் நிரப்பு. அதன் பிறகு பேசிக்கொள்வோமென்று அனுப்பிவிட்டு, அன்றிரவு தனித்திருக்கையில் தான் மங்களாம்பாளுக்குக் கெடு வைத்திருந்த இரண்டு வருஷங்களும் முடிவதற்கு, இன்னம் ஆறுநாட்களிருக்கின்றனவென்று கணக்கிட்டுப் பார்த்தறிந்து திடுக்கிட்டு அக்கணமே ககனமார்க்கமாக அவிநாசி சென்று ஒருவரும் அறியாவண்ணம் அவள் வீட்டுக்குள் பிரவேசித்துச் சற்று மறைந்திருந்தான். அப்பொழுது நாழிகை பதினைந்து ஆய்விட்டது. வீட்டில் எல்லாரும் அயர்ந்து தூங்கிவிட்டார்கள். ஓர் அறைக்குள் மெதுவான பேச்சுத்தொனி கேட்டது. அதென்னவென்று உற்றுக்கேட்டான். "பாலாம்பா! என் கணவன் குறித்த காலம் கடந்து போயிற்று. ஆறுநாளிருக்கின்றன. இனிமேல் அவர்வருவார் என்கிற நம்பிக்கையில்லை. இன்னம் ஒருதடவை அவருடைய மந்தகாசம் விளங்கிய சுந்தரவதனத்தைக் காணலாகு மென்கிற நம்பிக்கை கொண்டே யிதுவரைக்கும் உயிர்தரித்திருந்தேன். அளவில்லாத கஷ்டங்களையும் சகித்தேன். வேதசாஸ்திராதிகளையும், அவற்றை யோதி உண்மை உணர்ந்த பேரறிவாளர் வசனங்களையும் மெய்யென நம்பி, கணவனையே தெய்வமாக வழிபடும் பெண்மணிகளின் திவ்யசரித்திரங்களை யுணர்ந்த நான் இனி வேறொரு புருஷனைக் கனவிலும் கருதேன். நான் பிழைத்திருப்பேனானால் பெற்றோர் கட்டாயமாக வேறொருவருக்கு மணம் செய்து கொடுப்பார்கள். அது அவர்களது கடமை. அப்படியானால் கற்புடைமை முற்றுங்கெட்டு நரகதுக்கம் அனுபவிக்க நேரிடும். அதைவிட இந்த ஆறுநாளளவும் பொறுத்திருந்து பின் உயிர் துறப்பதே தகுதி. அக்கால எல்லைக்குள் பிராணனைவிட்டு விடுதல் நன்மையானாலும் அதனால் கணவனுடைய கட்டளையை மறுத்த பாபம் சம்பவிக்குமென்று பயப்படுகிறேன். ஒருக்கால் அவர் வெகு கஷ்டப்பட்டுத் தமது எண்ணங்களை முடித்துக்கொண்டு வெகு ஆசையோடும் என்னைப்பார்க்கும்படி தேடிவந்து, நான் இறந்துபோனேன் என்று கேள்விப்பட்டால் என்னபாடு படுவார்? அது எனக்கு எல்லாப்பாபங்களிலும் மேலான பாபமாக முடியுமல்லவா? ஆ! தோழீ! நான் என்னசெய்வேன்? என் கதி யிப்படியாயிற்றே! இன்னமொருதரம் என் நாயகனுடைய திருமுகதரிசனம் காணக்கிடைக்குமோ வென்று மனமுருகுகின்றது. இப்பிறப்பிலேயே காண்பேனோ? காணமாட்டேனோ தெரியவில்லை. இச்

சமையம் உன்னையன்றி யெனக்கு ஆறுதல் சொல்பவர் ஒருவருமில்லை. இரவும் பகலும் கண்ணிமை மூடாமல் என்னைக்காத்து ஆறுதல் கூறிவருமுனக்கு நான் செய்யும் கைம்மாறு என்ன விருக்கிறது. சர்வேசுவரன் தான் உனக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டும் எனப், பாலாம்பாள் அம்மா! எனக்கென்ன வருத்தமிருக்கிறது? நீ சுகப்பட்டு முன்போல என்னோடு இன்பமான வசனங்களைப்பேசிக் கொண்டிருப்பாயானால் அதுவே யெனக்குப் பரமசுகம். நீ உன் கணவனோடு கூடிவாழ்ந்திருப்பதைக், கண்களாரப்பார்ப்பதே யெனது பெரும்பாக்கியம். இதற்கு நான் என்ன செய்கிறது? என்னால் ஒன்றும் செய்யக்கூடவில்லையே? நீயிருக்கும் நிலைமையைக்காணும்பொழுது வயிறும் மனமும் பற்றியெரிகின்றன. ஆனால் உன் கணவன் இந்த ஆறுநாட்களுக்குள் வருவார்; வாராமலிரார். அப்படி யவர் வாராமலிருந்து நீயும் உயிர் துறப்பாயானால் நானு முன்னைப் பின் தொடர்ந்து வருவேனேயன்றி இவ்வுலகில் தனியே யிருக்கமாட்டேன். வேறுநினைக்கவேண்டாம். உன்னுயிர்வேறு என்னுயிர்வேறென்று நினையாதே. நம்மிருவருக்கும் உடல் வேறாகவிருப்பதேயன்றி உயிர்வேறல்ல; ஒன்றேயாம். உன்சுகம் என்சுகமே; உன்துக்கம் என்துக்கமே; சந்தேகமில்லை. நிற்க நீ கவலைப்படவேண்டாம். இரண்டு நாட்களாகப் பல பல நற்சகுனங்கள் காண்கின்றனவாதலால் நமக்கு நல்லகாலம் பிறக்குமென்றே நினைக்கிறேன். தெய்வத்துக்குக் கருணையில்லாமற் போகாது. என்னவோ பார்ப்போம்" என்று இனியவசனங்கள்கூறினாள். இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஜகதீசன் இருவருடைய சிநேகத்துக்கும், தன் மனைவியின் கற்புடைமைக்கும் மகிழ்ந்து நாமினிச் சும்மாவிருக்கலாகாது. இருந்தால் அபாயம் நேரிடும். நாமிதற்குள் வந்துசேர்ந்தது தெய்வகடாட்சமும், மங்களாம்பாளுடைய கற்புடைமையும் காரணமாக இருந்தமையால் தான். பதிவிரதையான பெண்ணுக்கு ஒரு குறைவும் நேரிடுகிறதில்லை. அப்பெண்ணும் அப்பெண்ணைமணந்த கணவனும், அவர்களுடைய குடும்பங்களும் இம்மை மறுமையிரண்டிலும் சுகத்தையடைந்து கடைசியில் மோட்சத்தை அடைகிறார்கள். "இல்லதெனில்லவண்மாண்பானால்" "பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந், திண்மையுண்டாகப்பெறின்" என்ற நீதிவசனங்களுக்கு நானேயிலட்சியமானேன். "தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்றவாக்கியத்துக்கு மங்களாம்பாள் இலட்சியமானாள். ஆதலால் நம்மைவிடப் பாக்கியசாலி ஒருவருமில்லை. என்றுகருதித் தன் மனதுக்குள் மகிழ்ச்சியடைந்து மங்களாம்பா! சொன்ன கெடுதவறாமல் வந்துவிட்டேன்,

## விக்டோரியா ஞாபகஸ்தாபனம்.

மார்ச்சு மீ 31-ல ஞாயிறன்று ஆனரெபில் ஜஸ்டிஸ் ஸர். வெ. பாஷியமையங்கார் பங்களாவில் மேற்கண்ட விஷயமாய் ஸ்திரீகள் சேர்ந்து கூடினபோது, ஸர். வெ. பாஷியமையங்காரின் மூத்த குமாரத்தியாகிய ஸ்ரீமதீ சீதம்மாளவர்கள் பின் வருமாறு ஒரு வியாசம் எழுதிக்கொண்டு வந்து படித்தார்கள். அதின் சுருக்கமாவது "மகாகனம் தங்கிய நமது சிமை ராணியாரவர்களாகிய விக்டோரியா சக்கிரவர்த்தினி காலம்சென்ற சமாசாரத்தை நாம் தெரிந்து நிரம்பவும் துக்கிக்கிறோம். மேற்படி சக்கிரவர்த்தினியாரின் குணங்களை விவரித்துச்சொல்ல நம்மால் சாத்தியமல்ல. இங்கிலண்டு தேசத்தை 63 வருஷகாலம் நீடித்து ஆண்டிருக்கிறார்கள். ஸ்திரீயாயிருந்தும் அவர்களுடைய ஆளுகையில் கல்வி நாகரீகம் முதலானவை பெரும்பாலும் விருத்தி யடைந்து வந்தன. நம்முடைய தேசத்துக்குப் பஞ்சம் வந்தாலும் ஜனங்களுக்குக் கொடிய வியாதி ஸம்பவித்தாலும் மகாராணியவர்கள் தங்கள் குழந்தைகள் விஷயத்தில் அருமை பாராட்டுவதுபோல் நம்மிடம் அன்பு பாராட்டி நம்மை ஆதரித்து வந்தார்கள். இந்தியா தேசத்துக்கு அனுப்பப்பட்ட பிரதி கவர்னர் ஜனரலவர்களிடத்திலும் அவர்கள் பாரியை இடத்திலும் இந்தத் தேசத்து ஸ்திரீகளை ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கும்படி அவர்களுக்குக் கட்டளை யிட்டிருந்தார்கள். இத்தேசத்து ஸ்திரீஜனங்கள் வர்ணாசிரமத்துக்குப் பயந்து வியாதியால் சிரமப்படும்போது ஆசுபத்திரிகளில் வந்து வைத்தியம் செய்துகொள்ள அஞ்சிக்கைப்படுவதை நமது காலஞ்சென்ற சக்கிரவர்த்தினியார் தெரிந்துகொண்டு, லார்ட் டப்ரின் அவர்கள் இராஜபபிரதிநிதியாக இவ்விடம் வந்தபோது அவர்கள் பாரியாளவர்களிடம் ஹிந்து காஸ்டு கோஷா ஆஸ்பத்திரி கட்டவேண்டுமென்று சட்டளையிட்டார்கள். அதைச் சிரஸாவகித்து லேடி டப்ரின் அவர்கள் பணம் வசூலித்து நமது சென்னைபட்டணத்தில் ஒரு ஆசுபத்திரி நமது மகாராணியின் பேரைவைத்து ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதில் வாசமாகவிருந்து வைத்தியம் பார்த்துக்கொண்டவர்கள் தவிர வெளியிலிருந்துவந்து வைத்தியம் பார்த்துக்கொண்டவர்கள் சென்ற வருஷத்தில்மட்டும் பதினோராயிரம்.

புருஷர்கள் நமது காலம்சென்ற சக்கிரவர்த்தினியார் ஞாபகஸ்தாபனத்திற்காகப் பல விடங்களில் பல காரியங்கள் எத்தனித்திருக்கிறார்கள்.

நமது காருணிய கவர்னரவர்களின் பாரியையான லேடி ஆபட் ஹில் அவர்களின் கருத்தாவது, இந்த இராஜதானியின் 22-ஜில்லாக்களிலுள்ள

ஸ்திரீகள் அவரவர்களுக்குத் தோன்றுகிற தொகை உதவிசெய்து மேற்படி ஆஸ்பத்திரியில் இன்னும் 20-படுக்கைகளுக்கு (Beds) இடம் முதலானவைகட்டி தாதிகள் முதலானவர்களை யேற்பாடு செய்யும்படி எத்தனித்திருக்கிறார்கள். இது விஷயத்தில் அவரவர் தங்களுக்குத்தோன்றுகிற தொகை உதவிசெய்வதுடன் தங்களுக்குத் தெரிந்த சினேகிதர்களுக்கும் இதன் கருத்தைத் தெரியப்படுத்தி அவர்களாலும் உதவி செய்யவேண்டுமாய் கோரப்படுகிறது.''

மேற்படி அபிப்பிராயத்தை வாசித்தபின் அவ்விடத்தில் கூடியிருந்த ஸ்திரீகளில் சிலர் மகாராணியா ரவர்களின் குணங்களைப்பற்றியும் சிலர் இப்பொழுது ஆஸ்பத்திரி எவ்விதமான உபகாரம் உண்டுபண்ணுகிறதென்பதைப்பற்றியும் விவரித்துச் சொன்னார்கள்.

---

## *நமது கவர்னர்.

---

சென்னை ராஜதானியின் கவர்னராயிருந்த சர் ஆர்தர் ஹாவ்லக் இங்குவந்து சென்ற டிசம்பர் மாசத்தோடு ஐந்து வருஷமாய்விட்டபடியால் இவருக்கு பதிலாக லார்ட் ஆம்ப்ட் ஹில் என்கிறவரை காலஞ்சென்ற மகாராணியின் மந்திரிகள் சென்னைக்கு கவர்னராக நியமிக்கவே, 1900ஆ டிசம்பர்மீ 28ந் தேதியன்று இவர் தமது வேலையை ஒப்புக்கொண்டார். இவர் இங்கிலாந்திலுள்ள பெரிய குடும்பங்களி லொன்றைச்சேர்ந்த லார்ட் ஓடோ ரஸ்ல் என்பவருடைய மூத்தகுமாரர். இவர் ஈட்டன், ஆக்ஸ்போர்ட், கலாசாலைகளிற் படித்து வித்தியாப் பட்டங்களைப்பெற்று வெகு புத்திசாலியென பேர்பெற்றார். எல்லா ஆங்கிலேயர்களைப்போலவே இவருக்கும் கிரிக்கட்டு, படகுவிடுவது முதலிய ஆட்டங்களில் விசேஷப்பிரியமெனச் சொல்லப்படுகிறது. இவர் பேசுவதில் மிகசாமர்த்திய முடையவர். ஆளுந்திறமையுள்ளவர். இவர் இங்கிலாந்தில் யாவராலும் மதிக்கப்பட்டு வந்தார். இவர் சுமார் 6 வருடங்களுக்குமுன் தான் லார்ட் பூசாம் என்பவருடைய குமார்த்தியாகிய லேடி மார்கரட் லீகன் என்பவரை மணம்புரிந்தார். இப்பொழுது 7-வது எட்வர்டின் குடியேற்ற நாடுகளுக்கு மந்திரியாகிய மகா சாமர்த்தியவானான மிஸ்டர் சாம்பர்லேனுக்கு ப்ரைவேட் ஸெக்ரிடெரியாய்ச் சிலகாலம் வேலைபார்த்தார். 1898-ம் வருஷத்தில். சர்க்கரை யேற்றுமதிக்குச் சில ஐரோப்பிய ராஜாங்கத்தார் பண உதவிசெய்கிற வழக்க சம்பந்தமாய் பிரஸில்ஸ் நகரத்தில் பல ராஜாங்கத்தார்களின் பிரதிநிதிகள் ஆலோசனை செய்யக்கூடினபோது, லார்ட் ஆம்ப்ட்ஹில் பிரிடிஷ் ராஜ்ஜியத்துக்கு ஒரு பிரதிநிதியாகப்போனார். இவருக்கு இப்பொழுது

வயது 31-க்கு மேலில்லை. ராஜாங்க விஷயங்களில் அனுபோகம் அதிகமில்லாம லிருந்தபோதிலும் இவருடைய புத்திசாதுரியத்தினால் இவர் ஜனங்களுக்கு நன்மைசெய்யக்கூடும். இவர் கவர்னர்வேலையை ஒப்புக்கொண்டமுதல் சென்னையிலுள்ள பலதொழிற் சாலைகளையும், கல்விச் சாலைகளையும், ஆஸ்பத்திரி, கப்பல்கள் தங்குமிடம் முதலியவைகளையும் பார்த்துவந்தார். சென்ற பிப்ரவரி மீ 20-உ சென்னையைவிட்டுப் புறப்பட்டு செங்கற்பட்டு, வட ஆற்காடு, கடப்பை, முதலிய ஜில்லாக்களில் சுற்றுபிரயாணம்செய்து குடிகளை நேரிற்கண்டு, அவர்கள் குறைகளை நன்றாக தாமே விசாரித்து அவர்களுக்கு தக்க பதிலளித்தார். 28-உ சென்னைவந்து சேர்ந்தார். மார்ச்சு மீ 11-உ சேலத்துக்குச் சென்று அங்குள்ள குடிகளுடன் கலந்துபேசி அவர்களுக்குள்ள குறைகளை யறிந்துகொண்டு ஆறுதலான பதிலளித்து சென்னைக்குவந்து சேர்ந்தார். இவர் இப்பொழுது நீலகிரிமலைக்குச் சென்றிருக்கிறார். இவர் வயதில் குறைந்தவரானாலும் புத்தியிலும், நல்லெண்ணத்திலும், குடிகளிடத்தில் அனுதாபம் காட்டுவதிலும் மேலானவராகத் தென்படுவதாகத் தோன்றுகிறது.

---

## மாதர்மனோரஞ்சினி வாழ்த்து அகவல்.

ஆழிசூழுலகில் வாழிநின்பெருமை
வாழிமாதர் மனோரஞ்சினி நீ
தளர்நடையிட்டுத் தவழ்ந்திருவருடம்
பூர்த்தியாய்முற்றினை பூரணிவாழி
இவ்விருவருடம் செவ்வையாய்நின்னை
வாங்கிவாசித்த மடநலார்வாழி
ஓங்கு நின்னுடையுயர்மொழிக்கலனால்
சிறக்கப்புனைந்த திறலோர்வாழி,
பாங்கு நீ பெறவே பரிவுடன் மூன்றும்
வயதுடன்வந்து வயங்குமிந்நாளில்
நின் சுவை யறியாமின்னலை நிகராய்
இடைமட மாதரிடம் புகுந்தன்னோர்
தம்பானிற்கும் வம்பாமடமையைப்
போக்குமாறறிவைப் பொலிவுறப்புகட்டிக்
கற்பைக்காக்குங் கடைப்பாடதனை
வெற்பெனவவருளவிளைநிலத்திட்டுப்
பொற்புடனுன்னைப் போற்றிவெளியிடும்
நற்குண நல்லாசிரியர் வாழியவே.

தி. முத்துராம பிள்ளை.

## விடுகதை.

வட்டமாய் வெண்மதிபோலிருக்கும்—வானிலாச் சந்திரனல்ல ;
பொழுது போவதைப் புகட்டும்—ஞாயிறுமல்ல ;
மேனியில் முட்களிருக்கும்—முள்ளம்பன்றியுமல்ல ;
ஆடவர் மகளிற்கோரணிகலமாகும்—பூணாரமுமல்ல ;
ஆறுக்கும் கொள்ளலாமதை அறுநூறுக்கும் கொள்ளலாம்—ஆழ்ந்த மணிமுத்துமல்ல ;
நொச்சொலி யதற்குண்டு—சுவரூர்ந்து வாழும் பல்லியுமல்ல ;
மனோரஞ்சினி போற்றுமாதரே இதன் பொருளுணர்ந்து பொலிவீரே.

ஓர் மாது.

1. ஏராதமரத்தில் எண்ணாயிரங்காய்.
2. மூக்குத்திபோல் பூப்பூர்க்கும் அப்பாடா என்ற காய்காய்க்கும்.
3. ஜன்னல்பின்னல்கயிறு, ஜாதிலிங்கக்கயிறு, எண்ணெய்ப்படாதகயிறு என்னகயிறு.
4. போவான் வருவான் திம்மப்பன் ஒருகாலால் நிற்பான் திம்மப்பன்.
5. ஊருக்கெல்லாம் ஒரே கல்.
6. எங்கள் மாட்டுக்கு மூன்றுகொம்பு பின்பக்கத்தால் பாயும்.

R. இலக்ஷ்மி அம்மாள்.

## NOTES and NEWS.

நாளது தேதிவரையில் தென்னாப்பிரிக்கா யுத்தத்துக்காகச் செய்யப்பட்ட செலவானது 1510 லட்சம்பவுன். ஒரு பவுன் இப்போது 15 ரூபாய் கொண்டதாகையால், இது 226½ கோடி ரூபாய்க்குச் சமானமாகிறது. இன்னும் யுத்தம் முடிவதற்கு முன்னால் 50 கோடி ரூபாயாவது செலவாகும் !!

கில்பர்ட் என்ற சிறுவன் அமெரிக்காவில் 1890-ஷ் பிறந்தான். 1897-ஷ் வக்கீல் பரீக்ஷையிற்றேறி பட்டமும் பெற்றான். 1897-ஷ் டிசம்பர்-மீ 21-ந்தேதி தானே ஒரு கேசுக்கு வக்கீலாகச்சென்று வெகு நன்றாக வாதாடினானும். இப்பையன் புத்தியே புத்தி, இப்பையனுக்கு ஈசன் தீர்க்காயுளளிப்பாராக.

மிஸ்டர் சத்தியநாதன் அவர்களுடைய பாரியாகிய கமலரத்னம் அம்மாள் எம். ஏ., பட்டம் பெற்றவிஷயம் யாவருக்கும் தெரிந்தவிஷயம். இப்போது இவருடைய தங்கையார் பி. ஏ. பட்டம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் எம். ஏ., பரீக்ஷைக்குப் படித்துவருகிறதாக அறிந்து மிகச் சந்தோஷப்படுகிறோம்.

மாமிசத்தைப்புசிப்பது உசிதமல்லவென அநேகரபிப்பிராயம். நமது சாஸ்திரத்தின் கொள்கையுமிதுதான். பழம், காய்கிழங்குகள்முதலியவை

களைப் புசிப்பவர்கள் அதிகநாள் ஜீவிக்கக்கூடியவர்களென்றும், சௌக்கிய மான தேகத்தையுடையவர்களென்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையே. உலகத்தில் 10-ல் 7-பேர் காய் கிழங்குகளைப் புசிப்பவர்களென தெரிகிறது. எக்காலம் ஜீவஹிம்சை செய்யாமல் எல்லாருமே காய் கிழங்குகளைப் புசிப்பவர்களாவார்களோ?

---

நமது பத்திரிகையை இதுவரையிலும் காலணு ஸ்டாம்பு ஒட்டிவைத்து அனுப்பிவந்தோம். இப்பொழுது இதற்கு ½ அணு ஸ்டாம்பு ஒட்டிவைத்து அனுப்பவேண்டுமென போஸ்டாபீசிலிருந்து நமக்கு கடிதம் வந்திருக்கிறது. நாமிதைக்குறித்து ஒரு கடிதம் எழுதி போஸ்ட்மாஸ்டர் ஜனரலவர்களுக்கு அனுப்பியிருக்கிறோம், இவ்விதம் அரையணு ஸ்டாம்பு ஒட்டிவைத்து அனுப்புவதில் நமது ஆபீஸுக்கு மாதமொன்றுக்கு ரூ. 6, நஷ்டமாகும் அதாவது வருடம் ரூ. 72.

---

மிஸ்டர் குருகர்:—தென்னாப்பிரிக்கா யுத்த சம்பந்தமாய் ராஜிபேச்சு நடந்தபொழுது லார்ட் கிச்சனருடைய நிபந்தனைகளை ஜெனரல் போதா ஆதரவாய்க் கேட்டதற்குக் காரணம் பிரிடிஷார் எவ்வளவு தூரம் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்று அறிந்துகொள்வதற்காகவே என்று சொன்னதோடு "நாங்கள் சரணாகதமடையாமல் பிரிடிஷாருக்குச் சமாதானம் கொடுப்போம். ஆனால் எங்களுடைய சுயேச்சையை நாங்கள் இழக்கமாட்டோம். நான் போவர்களுக்காக ஏசுநாதனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன் என்று அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஏசுநாதன் நானாவது என்னுடைய கூட்டத்தாராவது நசித்துப் போம்படி வைக்கமாட்டார்" என்றும் மிஸ்டர் குருகர் சொன்னதாகத் தெரியவருகிறது.

---

சென்னையில் சென்ற டிசம்பர் ஜெனவரி மாதங்களில் ப்ரைமரி பரீட்சைக்கு அனுப்பின பெண்களில் 86 பேர்தான் தேறியிருக்கிறார்கள். இவர்களில் ஒரு பெண் முதல் வகுப்பில் தேறியிருக்கிறாள். மற்ற 85 பேரும் இரண்டாவது வகுப்பில் தேறியிருக்கிறார்கள். திருவல்லிக்கேணி பெண் பாடசாலையில் 3 பேரும், மைலாப்பூரில் 2 பேரும், ராஜா சர் சவலை இராமசுவாமி முதலியார் பாடசாலையில் 6 பேரும், வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் 16 பேரும், மகம்மதியப் பெண்கள் 4 பேரும் இன்னுமிதரப் பாடசாலையில் 54 பெண்களாம். ப்ரைமரி பரீட்சையில் இவ்வளவு பெண்கள் தேறியது நம்மவர்கள் தங்கள் பெண்களுக்கு கல்வி புகட்டவேண்டுமென ஆசையிருப்பதாகத் தெரிகிறதல்லவா?

திருச்சினாப்பள்ளியில் இந்துமதாபிமானச் சங்கத்தாரால் நடத்தப்பட்டுவரும் ஓர் பெண்பாடசாலை சென்ற 5 வருஷமாக நடந்துவருகிறது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. இதில் சென்ற வருடத்தில் அநேக பெண்கள் கீழ்பரீட்சைகளில் தேறியிருக்கிறதைக் குறித்து சந்தோஷப்படுகிறோம். இப்பாடசாலைக்கு வரவேண்டிய ரிசல்ட் கிராண்டில்பெரும் பாகத்தை இச்சங்கத்தார் கவர்ன்மெண்டாரைக் கேட்டதற்கு ஐவேஜியில்லையென்று சொல்லிவிட்டது மிகவும் விசனிக்கத்தக்கதே. இங்குள்ள பெண்மணிகளுக்கு இந்து மதமும் கற்புடைமாதர்களின் சரித்திர பூர்வமாய் கற்பு முதலியநற்குண நற்செய்கைகளும் போதிக்கப்பட்டுவருகின்றன. இச்சபையார் ஊக்கமும், நல்லெண்ணமும் வீண்போகாது பயன்பெறுமெனக் கருதுகிறோம்.

---

ருஷியா தேசமும், ஐக்கியமாகாணமும் தான் முன்னுக்கு வருவதில் விசேஷ கீர்த்தியையடைந்து வருகின்றன. ருஷியா தேசத்தில் 1897௵-ல் ஜனத்தொகை 129,000,000, ஐக்கியமாகாணத்தில் 76,000,000, இதனால் ருஷியா ஐக்கியமாகாணத்தைப் பார்க்கிலும் அதிக ஜனங்களை உடையதாக தெரிகிறது. ஆனால் ஐக்கியமாகாணத்திலுள்ள ஜனங்கள் ருஷியர்களைப் பார்க்கிலும் அதிக புத்தியுள்ளவர்களென்றும், சுறுசுறுப்புள்ளவர்களென்றும், விடா முயற்சி, கல்வி அறிவுள்ளவர்களென்றும், சொல்லப்படுகிறது, இப்போது ருஷியர்களும் அவர்களுக்குச் சமமாகவிருக்க முயலுகிறார்களாம். 200 வருடங்களுக்குமுன் அமெரிக்காவில் 300,000 ஜனங்களிருந்தார்களாம். இப்பொழுதோ 80,000,000 ஜனங்களிருக்கிறார்கள். அமெரிக்காவில் அரிஸோனா என்ற ஊருக்கு மேற்குபாகங்களில் 100 மைல் தூரமுள்ள ஒரு காடு இருக்கிறதாம்.

---

**மகா விநோதப் பிறவி:**—நாளது மாதம் 11-ந்தேதியாகிய வியாழக்கிழமை தினத்தில் புதுக்காட்டைச் சேர்ந்த வல்லூரில் ஓர் நாயர் ஸ்திரீ சில தினங்களாய் பிரசவ வேதனைகண்டு கடைசியாய் மரணாவஸ்தையும் ஜன்னியும் கண்டு மரிக்கும் சமையத்தில், புதுக்காட்டிலுள்ள ரெயில்வே டாக்டர் மிஸ்டர் பொன்னுசாமி பிள்ளையைக் கூட்டிக்கொண்டுபோய் கடும் பிரயோகம் செய்து குழந்தைகள் எடுக்கப்பட்டனவாம். குழந்தைகளோ இரட்டையாம். தவிர இரண்டு தலையும், இரண்டு கைகளும், இரண்டு மார்பும், மார்பின்கீழ் தொப்புள்வரையில் ஒரு வயிறும், ஒரு தொப்புளும், தொப்புளின்கீழே மறுபடியும் இரண்டாகப்பிரிந்து, இரண்டு துடைகளும் கால்களும் வேறாக விருந்தனவாம். இரண்டும் 10 மாதம் நிறைந்த புஷ்டியுள்ள பெண்குழந்தைகளாம். ஒரு நாளைக்கு முன்னதாகவே வயிற்றில் செத்துக்கிடந்தனவாம். தாயும் உடனே மரித்துப்போனாளாம். இதனால் முன் காலத்தில் ராக்ஷசர்களிருந்தார்களென இராமாயணம் முதலியவைகளில் சொல்லியிருப்பதும் நிசமாகுமல்லவா?